விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii




E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 330 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 28 செவ்வாய்க்கிழமை (14.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக
# அரச ஊழியர்களுக்கு ரூ.10 ஆயிரம் கொடுப்பனவு




## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரையை ஆற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி அனைத்து அரச ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவுக்

16

## துண்டு விழும் தொகை 2,806 பில்லியன் ரூபாய்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்திற்கு அமைய, 2024 ஆம் ஆண்டில் அரச வருமானம் 4,172 பில்லியன் ரூபாயாகும்.

2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கு அமைய, அரசாங்கத்தின் மொத்த செலவினம் 6,978 பில்லி

15

## கடன் பெறுவதனையே அடிப்படையாகக் கொண்டது

### பட்ஜெட் குறித்து அநுர எம்.பி




(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் முன் வைத்துள்ள 2024ஆம் ஆண் டுக்கான வரவு செலவுத் திட்டம் கடனைப் பெறுவது மற்றும் அரச சொத்துக்களை

15

### அரசியல் நிவாரணத்தாலேயே
# நாடு வங்குரோத்து நிலையையடைந்தது



## பட்ஜெட் உரையில் ஜனாதிபதி

(கொழும்பு)

**போலியான வாக்குறுதிகள், அரசியல் நிவாரணங்கள் ஆகியவற்றால் நாடு வங்குரோத்து நிலையையடைந்தது. இதனை இனியும் தொடர முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

(16ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்வரும் ஆண்டு
## மூலதன செலவுக்கான ஒதுக்கீடு அதிகரிப்பு

(கொழும்பு)

2024 வரவு செலவுத்திட்ட மூலதனச் செலவுக்கான ஒதுக்கீடு ரூ.1260 பில்லியனாக அதிகரிப்பு. இது மொத்தத் தேசிய உற்பத்தியில் 4% ஆகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

15

### வட மாகாணத்தில்
## 18ஆம் திகதிவரை மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கில் எதிர்வரும் 18ஆம் திகதி வரை கனமழை தொடரும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா

15

### அடுத்த வருடம்
## ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி

15

## உடனடியாக கூறமுடியாது பொறுமையாக பதிலளிப்போம்



### பட்ஜெட் தொடர்பில் மகிந்த

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டம்தொடர்பில் உடனடியாக எதனையும் கூறிவிட முடியாது. பொறுமையாக பதிலளிப்போம் என முன்னாள்

15

### ஜனவரி முதல்
## வற்வரி அதிகரிப்பு

(கொழும்பு)

அதிகரிக்கப்பட்டுள்ள பெறுமதிசேர் (VAT) வரி எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடை

15

## பட்ஜெட்டில் வடக்கு - கிழக்கு மக்களுக்கான அறிவிப்புக்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்காக 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் எனவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தம் முடிவுக்கு வந்து இதுவரை மீள் குடியேற்றம் செய்யப்படாத இடங்களுக்காக 2000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதாகவும் நேற்றைய தனது வரவு செலவுத்திட்ட உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் தமிழ் பேசும்

16

### கரவெட்டியில்
## மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(கரணவாய்)

கரவெட்டி மத்தியில் மயங்கி விழுந்த நகர சபை உத்தியோகத்தர்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் அரசியல் நெருக்கடியல்ல பொருளாதார நெருக்கடியே உள்ளது

## எதிர்க்கட்சியினரிடம் நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

சகல தரப்பினரது கோரிக்கைகளையும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிறைவேற்ற முடியாது. நாட்டில் பொருளாதார நெருக்கடி உள்ளதே தவிர அரசியல் நெருக்கடி இல்லை என்பதை எதிர்க்கட்சிகள் விளங்கிக் கொள்ள வேண்டும். எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும், நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

இதனை தொடர்ந்து வரவு செலவுத் திட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பாரிய நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு செலவுத் திட்டத்தை முன்மொழிந்துள்ளார் என்பதை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனாதிபதியிடம் வரவு செலவு திட்டத்தை புகழ்ந்துவிட்டு குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மக்கள் மத்தியில் வரவு செலவுத் திட்டத்தை விமர்சிப்பது முறையற்றது. நாடு தற்போது பொருளாதார நெருக்கடியில் உள்ளதே தவிர அரசியல் நெருக்கடியில் இல்லை என்பதை எதிர்க்கட்சிகள் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

கடந்த ஒருவருட காலமாக அரசியல் நோக்கமில்லாமல் தீர்மானங்கள் எடுத்ததால் நாடு சற்றேனும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. சகல தரப்பினராலும் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிறைவேற்ற முடியாது. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிலையான பொருளாதார கொள்கை என்பதை இலக்காக கொண்டுள்ளது. அரச சேவையாளர்களுக்கு 10,000 ரூபா கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளதே தவிர அரச சேவையாளர்களின் எண்ணிக்கையை விரிவுப்படுத்தும் நோக்கம் ஏதும் கிடையாது.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் யோசனைகள் குறித்து நிச்சயம் அவதானம் செலுத்துவோம். எதிர்க்கட்சிகளை புறக்கணித்து ஒருபோதும் செயற்பட போவதில்லை. பொருளாதார மீட்சிக்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம் என்றார். (ம-7)

# 2024 பட்ஜெட்டில் மாணவர்களுக்கான சலுகைகள்

உயர்தர பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவர்களுக்கும் விசேட செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், புதிதாக நான்கு பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் புதிய பீடங்களை அமைக்க விசேட நிதி ஒதுக்கீடு. அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை அமைக்க சட்டத்தில் திருத்தம் செய்து இடமளிப்பு உள்ளிட்ட விடயங்களையும் ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

மேலும், வர்த்தக வங்கிகள் ஊடாக மாணவர் கல்விக்கடன் - தொழில் கிடைத்த பின்னர் அவர்கள் மீள்செலுத்தக் கூடிய ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

பல்கலை தகுதி பெறாத மாணவர்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டு தொழில்வாய்ப்பு - அவர்களுக்கு விசேட பயிற்சியளிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அன்னவருக்கும் பாடசலைகளில் விசேட ஆங்கிலக்கல்வி திட்டம் அறிமுகம் - மாணவர்களுக்கு சுரக்ஷா காப்புறுதித் திட்டம் மீண்டும் அறிமுகம் உள்ளிட்ட மேலும் பல திட்டங்களை ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

தற்போது நாட்டில் பழமையான கல்வி முறைமை நடைமுறையில் உள்ளது. நவீன உலகுக்கு பொருத்தமான கல்வி முறைமை 2024 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டிலுள்ள சகலருக்கும் ஆங்கிலம் "திட்டத்துக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2034 ஆம் ஆண்டு சகலருக்கும் ஆங்கிலம் என்ற இலக்கு வெற்றி பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளர். (ம-7)

# தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்

## ரோஹித அபேகுணவர்தன எம்.பி

நாட்டில் உள்ள தனியார் துறை ஊழியர்களுக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

அரச உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமின்றி நாட்டு மக்கள் அனைவரும் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிப்பதை விட பொருட்களின் விலைகளைக் குறைப்பது சிறந்ததாகும்.

அதனை விடுத்து சம்பளத்தை அதிகரிப்பதாயின் அரச உத்தியோகத்தர்களது சம்பளம் மாத்திரமின்றி, தனியார் துறையினருக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

சரியாக நோயை இனங்கண்டு அதற்கு சிகிச்சையளிப்பதற்கான யோசனையையே நாம் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம்.

எமது பரிந்துரைகளை முன்வைத்திருக்கின்றோமே தவிர, பொதுஜன பெரமுன சார்பில் வரவு - செலவு திட்டம் தொடர்பில் விசேட கலந்துரையாடல்கள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் இந்த வரவு - செலவு திட்டம் மக்களுக்கு சிறந்ததாக அமைய வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும் என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# வரவு - செலவு திட்டத்தில் மக்களுக்கு நிவாரணம் இல்லை

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கான நிவாரணம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச ஊழியருக்கு ஏப்ரல் மாதம் முதல் 10000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், ஓய்வூதியர்களும் 2500 ரூபா கொடுப்பனவை பெறுவதற்கு ஏப்ரல் மாதம் வரை காத்திருக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவில்லை எனவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். (ம-7)

# கட்டுநாயக்கவில் போலி கடவுச் சீட்டுடன் ஈரானிய பெண் கைது

போலியான கடவுச்சீட்டுடன் இலங்கைக்குள் பிரவேசித்த ஈரானிய பெண் ஒருவர் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

53 வயதான பெண் ஒருவரே இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் இந்தியாவுக்கு ஏறவிருந்தபோது கைது செய்யப்பட்டதாக குடிவரவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சந்தேகநபர் இலங்கைக்குள் பிரவேசிக்க பயன்படுத்திய ஆஸ்திரிய கடவுச்சீட்டை பரிசோதனை செய்தவுடன் அது போலியானது என கண்டறிப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நாட்டிற்கு வந்திருந்த குறித்த பெண் தனது கடவுச்சீட்டில் கொழும்பில் இருந்து பெறப்பட்ட இந்திய வீசாவை ஒட்டிய நிலையில் நேற்று இந்தியா செல்ல முயற்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சின்னப்பு பத்மநாதன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
திதி:
வளர்பிறை பிரதமை
[14.11.2023]
அன்பும் பண்பும் நிறைந்த
எங்கள் குடும்ப தீபமே!
என்றும் அணையாது
உங்கள் ஞாபக ஒளிகள்
தோற்றம் 07.02.1944
மறைவு 31.10.2016
"மிதிலா"
கூவில்,
புலோலி தென்மேற்கு,
புலோலி.
உங்கள் நினைவலைகளுடன்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
(17869)



பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை
யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பகல் நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
வயது : 40 - 65
(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை)
தொடர்புகளுக்கு
076 097 3121



மலிவு விற்பனை
கடந்த 40 வருடங்களாக யாழ் மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER Ria MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும்.
(C-7604)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட்டை ஆராய்ந்த பின்னரே
# இரண்டாம் கட்ட கடன்
## ஐ.எம்.எப் தெரிவிப்பு

(கொழும்பு)

**சர்வதேச நாணய நிதியத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான ஒப்பந்தம் தொடர்பான வரவு-செலவுத் திட்டத்தை ஆராய்ந்த பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை கடனை விடுவிக்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஆனால் வரவு - செலவுத் திட்டத்தில் நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட வருமான இலக்குகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி, சீனக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உத்தியோகபூர்வ ஆவணங்கள் நாணய நிதியத்திற்கு இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

இந்நிலையில், அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டத்துடன் அந்த ஆவணங்களும் ஒரே நேரத்தில் கிடைத்தால், அடுத்த மாதத்திற்குள் இரண்டாவது கடன் தவணை வழங்கப்படும் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு கடன் தவணையாக பெற வேண்டிய தொகை 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# அமைச்சு பதவியை துறக்க
## தயாராகும் ரொஷான் ரணசிங்க

(கொழும்பு)



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏற்பட்டுள்ள முறுகலை அடுத்து அமைச்சு பதவியில் இருந்த ரொஷான் ரண்சிங்க பதவி விலகவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அடுத்து வரும் சில நாட்களில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பதவியை ராஜினாமா செய்யலாம் அல்லது பதவியில் இருந்து நீக்கப்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தன்னை பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஏற்கனவே ரொஷான் ரணசிங்க தெரிவித்திருந்தார்.

சர்ச்சைக்குரிய இலங்கை கிரிக்கெட் சபையை இடைநிறுத்தி, இடைக்கால நிர்வாக சபையை விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்திருந்தார்.

இதன் காரணமாக ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளால் இந்த பதவி விலகல் ஏற்படவுள்ளது.

ஆளும்கட்சி அமைச்சரான ரொஷான் ரணசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# நிர்க்கதியான நிலையில்
## ஜோர்தானில் இலங்கையர்கள்

(கொழும்பு)

விசாக்காலம் நீடிக்கப்படாத நிலையில் 200 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் ஜோர்தானில் சிக்கித் தவிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இலங்கையர்கள் ஜோர்தானின் சஹாப், அல் ஜுமாத் இண்டஸ்ட்ரியல் சிட்டியில் உள்ள அசீல் என்ற தொழிற்சாலையில் பணிபுரிந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

விசா நீடிக்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை தாம் தற்போது எதிர்நோக்கி வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் அவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது (நி-5-6)

# ஜனாதிபதி அலுவலகத்தில்
## தீபாவளி கொண்டாட்டம்



(கொழும்பு)

உலகெங்கிலும் உள்ள இந்துக்களால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட தீபாவளி கொண்டாட்ட நிகழ்வு இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கொண்டாட்டம் இந்து சமய சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு மிகவும் எளிமையாகவும் நேர்த்தியாகவும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு இந்து சமய கலாச்சார முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிகழ்வில் கலந்து கொண்ட இந்துக்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்ததோடு அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார். (நி-5-6)

# வடபகுதியின் வளர்ச்சிக்கு
# தொடர்ந்து ஒத்துழைப்போம்
## ஜப்பான் தூதுவர் உறுதி



(கொழும்பு)

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள ஜப்பான் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் வட மாகாணம் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பான் அரசின் சார்பில், வடபகுதியின் வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பு தொடர்ந் தும் வழங்கப்படும் என்று தூதுவர் உறுதி அளித்தார் என்று வடமாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (நி-5-6)

# பலாங்கொடையில் மண்சரிவு
# மூன்று வீடுகள் சேதம்
## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மாயம்



(ஹற்றன்)

பலாங்கொடை, கவரஹேனை பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, 2 மகள்கள் காணாமல் போயுள்ளனர். பலாங்கொடை - உடவெல ஹொரன்கந்துர பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாக இரத்தினபுரி அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2023 உலகக் கிண்ண அரையிறுதி

# இந்தியா - நியூஸிலாந்து தென்னாபிரிக்கா - ஆஸி




உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் முதல் சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் நிறைவடைந்த நிலையில் அரையிறுதியில் இந்திய அணி நியூஸிலாந் துடனும் தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியாவுடனும் மோதவுள்ளன.

உலகக் கிண்ண அரையிறுதிக்கு முன்னேறுவதற்கு குறுகிய வாய்ப்புடன் கடந்த சனிக்கிழமை (10) இங்கிலாந்து அணியை எதிர்கொண்ட பாகிஸ்தான் அணி 93 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்ததை அடுத்து அரையிறுதி வாய்ப்பை இழந்ததோடு நியூசிலாந்து அணியின் அரையிறுதி வாய்ப்பு உறுதி செய்யப்பட்டது. அதேபோன்று ரவுண்ட் ரொபின் சுற்று முடிவில் அணிகள் புள்ளிப்பட்டியில் முதல் 8 இடங்களுக்குள் முன்னேறத் தவறிய இலங்கை அணி 2025 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான தகுதியை இழந்துள்ளது. இதன்படி புள்ளிப் பட்டியலில் முதல் 8 இடங்களுக்கு முன்னேறி இருக்கும் இந்தியா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகள் சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கு தகுதி பெற்றுள்ளன.

இதன்படி உலகக் கிண்ணத்தின் முதல் அரையிறுதிப் போட்டி நாளை புதன்கிழமை மும்பை, வாங்கடே அரங்கில் நடைபெறவுள்ளதாடு அதில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன. தொடர்ந்து வியாழக்கிழமை (16) கொல்கத்தா, ஈடன் காடன் மைதானத்தில் நடைபெறும் இரண்டாவது அரையிறுதியில் தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோதவுள்ளன. (ம-7)

# இந்திய கிரிக்கெட் அணிக்கு பிரதமர் மோடி வாழ்த்து



உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி நெதர்லாந்தை வீழ்த்தி 9ஆவது வெற்றியை பெற்றது. இதையொட்டி இந்திய கிரிக்கெட் அணிக்கு பாரத பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது "எக்ஸ்" பதிவில் கூறி இருப்பதாவது,

தீபாவளியை மேலும் சிறப்பு மிக்கதாக மாற்றியதற்கு நமது கிரிக்கெட் அணிக்கு நன்றி. நெதர்லாந்துக்கு எதிராக அபாரமான வெற்றி பெற்றதற்கு வாழ்த்துக்கள். இதேபோல் அரை இறுதியிலும் வெற்றி பெற வாழ்த்துக்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ம-7)

# தேசியமட்ட பூப்பந்தாட்ட போட்டியில் யாழ். வீரர்களுக்கு பதக்கங்கள்









தேசியமட்ட பூப்பந்தாட்ட போட்டியில் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான யாழ்ப்பாண மாவட்ட வீரர்கள் சாதித்து பதக்கங்களை பெற்றுள்ளனர்.

வடமாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை பூப்பந்தாட்ட சங்கம் முதன்முறையாக தேசியமட்ட பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்தியது.

ஒக்டோபர் 31ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 4ஆம் திகதி வரை இந்த சுற்றுப்போட்டி கிளிநொச்சி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

30 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் ஒற்றையர் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த எல்.றொபின்சன் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

30 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் இரட்டையர் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த எல்.றொபின்சன் மற்றும் ரி.துசாந்தன் இணை இரண்டாம் இடத்தையும் எஸ்.ஜெனகன் மற்றும் எஸ்.ரம்மியராகுலன் இணை மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இந்த பிரிவில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்கள் இரட்டையர்கள் முதலிடத்தைப் பெற்றனர். (ம-7)

# அரவிந்த டி சில்வாவிற்கு ஹால் ஒப் பேம் விருது



இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் அரவிந்த டி சில்வா சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஹால் ஒப் பேம் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டியில் அரவிந்த டி சில்வா சதம் அடித்தார்.

அரவிந்த டி சில்வா இலங்கை அணிக்காக 93 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6361 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

308 ஒருநாள் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்திய அரவிந்த டி சில்வா, 9284 ஓட்டங்களைக்குவித்துள்ளார்.

இது கிரிக்கெட் வீரர் அல்லது வீராங்கனைக்கு சர்வதேச கிரிக்கெட் பேரவையால் வழங்கப்படும் [illegible] (ம-7)

# ரோகித் சர்மாவின் ஆட்டத்தை கண்டு மெய்சிலிர்த்த வசிம் அக்ரம்




ரோகித் சர்மாவின் ஆட்டத்தை பார்க்கும் போது பாகிஸ்தான் முன்னாள் வீரர் இன்சமாம் உல் ஹக்கை பார்த்த மாதிரி உள்ளதாக வாசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

உலக கிரிக்கெட்டில் ரோகித் சர்மாவைப் போல் யாரும் இல்லை என்று நினைக்கிறேன். நாம் கோலி, ஜோ ரூட், வில்லியம்சன் மற்றும் பாபர் அசாம் பற்றி பேசுகிறோம். ஆனால் இவர் வித்தியாசமானவர். அவர் பேட்டிங்கை மிகவும் எளிதாக்குகிறார்.

இன்சமாம் உல் ஹக் வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ளும்போது கூடுதல் நேரம் இருக்கும். அதேபோன்று ரோகித் சர்மாவிற்கும் வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்த்து விளையாடும்போது கூடுதலான நேரம் கிடைக்கிறது. அவரது கை மற்றும் கண்களின் பார்வையும் வெகு சிறப்பாக இருப்பதால் அவரால் எளிதாக வேகப்பந்து வீச்சாளர்களை அடித்து விளையாட முடிகிறது. அவர் இப்படி ஆட்டத்தின் துவக்கத்திலேயே அதிரடியாக ரன்களை குவிப்பதால் பின்னால் வரும் வீரர்களுக்கும் ஆட்டம் சாதகமாக இருக்கிறது.

எந்த ஒரு சூழ்நிலையாக இருந்தாலும் எந்த ஒரு பந்துவீச்சாளராக இருந்தாலும் சரி அதிரடி ஆட்டத்தை அவர் வெளிப்படுத்துகிறார். முதல் ஓவரிலிருந்தே அவர் அடித்து விளையாடுவது அணிக்கு பயனுள்ளதாக மாறுகிறது. ரோகித் சர்மா போன்ற ஒரு பேட்ஸ்மேன் இருக்கும்போது எதிரணியில் இருக்கும் பவுலர்களுக்கு நிச்சயம் சிரமமாகத்தான் இருக்கும் என தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமார் 5 லட்சம் பாவனையாளர்களுக்கு மின்இணைப்பு துண்டிப்பு- மின்சாரசபை

(கொழும்பு)

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை 5 இலட்சத்திற்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் நிலுவைத் தொகையை செலுத்தத் தவறியதன் காரணமாக இலங்கை மின்சாரசபை அவர்களின் மின்சார விநியோகத்தை துண்டித்துள்ளது.

மின்சாரசபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் நோயல் பிரியந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையில்கள் செலுத்தப்படாமையின் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நுகர்வோருக்கு 30 நாள் கடன் காலப்பயன்பாடும், தோராயமாக 10 நாட்களுக்கான அறிவிப்பும் வழங்கப்படுவதாகவும், அதன் பிறகு அவர்களின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாகவும் நோயல் பிரியந்த விளக்கினார்.

மின்சார சபையின் பல்வேறு விதிமுறைகளுக்கு அமைவாகவே மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், வாடிக்கையாளர் நிலுவைத் தொகையை செலுத்தியவுடன் மின்இணைப்பு மீள வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

செலவைக் குறைக்கும் நடவடிக்கையாக இலங்கை மின்சார சபை கடந்த வருடத்தில் மூன்று தடவைகள் மின்சாரக் கட்டணங்களைத் திருத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பச்சிலைப்பள்ளியில் இடம் பெற்ற அனர்த்த முன்னாயத்த கலந்துரையாடல்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச மட்ட வடகீழ் பருவப் பெயர்ச்சி மழைக்கால அனர்த்த முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் எஸ். கிருஸ்ணேந்திரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சி.கோகுலராஜா பருவமழை மற்றும் இதனால் பிரதேசத்தில் எதிர்வு கூறக் கூடிய அனர்த்த நிலைமைகள் தொடர்பாக விளக்கமளித்தார். தொடர்ந்து. உள்ளூராட்சிமன்ற அதிகார சபை ரீதியான அனர்த்த அபாய குறைப்பு திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி பிரதேச திட்ட நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. வடகீழ் பருவப் பெயர்ச்சி பருவ மழையின் போது ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகள் தொடர்பாக, துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக வெள்ள அனர்த்தங்களை கட்டுப்படுத்துவதற்காக கால்வாய்களை மீள் செப்பனிடல் மற்றும் கட்டாக்காலி மாடுகள், நாய்களால் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டது. மேலும் இதன்போது அனர்த்தங்களின் போது மக்களை பாதுகாப்பதற்கான முன்னாயத்த செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (நி-5-6-315)

# 2024 இற்கான பட்ஜெட்

## ஆட்சியாளர்களுக்கு சொர்க்கம்: மக்களுக்கு நரகம்



(கொழும்பு)

ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஆட்சியாளர்களுக்கு சொர்க்கமும் மக்களுக்கு நரகமும் காட்டப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்ட உரையை ஆரம்பித்த ஜனாதிபதி பௌத்தத்தை அவமதித்தார். மேலும் பிரார்த்தனை செய்ய வேண்டியவர்கள் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று புத்த பகவான் கூட போதித்தார், ஆனால் தற்போதைய ஜனாதிபதி பிரார்த்தனை செய்ய வில்லை.

இது நாட்டு மக்களை ஏமாற்றும் முயற்சி என்றும், வரவு-செலவுத்திட்டத்தில் நரகம் பற்றி பேசினாலும், ஆட்சியாளர்கள் சொர்க்கலோகத்தில் உள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2022 வரவு -செலவுத் திட்ட பிரேரணையில் எத்தனை விடயங்களை நிறைவேற்ற முடிந்தது என்பது குறித்தும் தெரிவித்த அவர், வரவு - செலவு திட்ட பிரேரணையில் அதிகளவான விடயங்களை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளதாகவும் தெரிவித்தார். (நி-5-6)




நு/நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தின்
முன்னாள் ஆசிரியர்களான, ஜேர்மனை வசிப்பிடமாகக்கொண்ட
தமிழ்வாரிதி திரு.திருமதி.குலேந்திரராஜா
சாந்தினி தம்பதிகளின்

மணிவிழாவும்
K.T.C நிறுவன பரிசளிப்பு விழாவும்

தலைவர் : பேராசிரியர் க.தேவராஜா
பிரதம விருந்தினர் : பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்
(முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
திருமதி.கௌரி சண்முகலிங்கன் M.Phil.(Ed.)
(ஓய்வுநிலை ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)
இடம் : ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மண்டபம், கோண்டாவில் கிழக்கு
காலம் : 15.11.2023 புதன்கிழமை பி.ப. 3.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மணிவிழாச் சபையினர்.

(17861)


# இராசிபலன்

14.11.2023
ஐப்பசி 28, செவ்வாய்க்கிழமை
பிரதமை பிற்பகல் 3.21 மணிவரை

அனுசம் பின்னிரவு 4.40 மணிவரை
சுபநேரம் -10.37-12.07 மணிவரை
இராகுகாலம்-3.07-4.37 மணிவரை

சந்திராஷ்டமம்- பரணி
கந்தசஷ்டி விரதாரம்பம்.

**வளவன்**

**மேஷம்**: மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, இறைவழிபாட்டால் இன்பங்கள் காண வேண்டிய நாள்.

**கடகம்**: மனதிற்கினிய சம்பங்கள் நடைபெறும் நாள், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**துலாம்**: உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**மகரம்**: மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்**: சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும், செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்**: சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பயன் கிடைக்கும்.

**விருச்சிகம்**: குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்**: எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**: ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி**: சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு**: திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம்.

**மீனம்**: சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பில் பதிவிட்டவருக்கு பொலிஸார் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்துபி தொடர்பாக முகநூலில் பதிவிட்ட பல்கலைக் கழக ஊழியர் ஒருவருக்கு எதிராக பல்கலைக்கழக பேராசிரியர்கள் இருவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பணியாற்றி தற்பொழுது கொழும்புப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்கு எதிராகவே இணைய வழி ஊடாக பொலிஸ் மா அதிபருக்கும் யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் குறித்த நபரை காங்கேசன்துறையில் உள்ள பொலிஸாரின் தகவல் தொழில்நுட்ப பிரிவு அலுவலகத்துக்கும் யாழ். பொலிஸ் நிலையத்திற்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6-33)



யாழ்.குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற விமானக்குண்டுத் தாக்குதலின் 30 ஆவது நினைவேந்தல் நிகழ்வில் உயிர் நீத்தவர்களுக்கு உறவுகளால் ஈகைச்சுடர்கள் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (படங்கள்:-சிவசாந்தன்)

# பழங்களை பழுக்க வைக்க பயன்படும் இரசாயனங்கள்

## வியாபாரிகளுக்கு எச்சரிக்கை

(சாவகச்சேரி)

பூநகரிச் சந்தைகளில் பழங்களைப் பழுக்க வைக்க இரசாயனங்களை நேரடியாகப் பிரயோகிக்கும் வியாபாரிகளைக் கண்டு பிடித்து எச்சரித்ததோடு பாதுகாப்பாக பழுக்க வைக்கும் முறைமை குறித்தும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெளிவூட்டியிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பூநகரி பகுதியிலுள்ள பலசரக்கு வர்த்தக நிலையங்கள் மற்றும் பழவிற்பனை நிலையங்கள் மீது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது பலசரக்கு கடைகளின் களஞ்சியப் பகுதி மற்றும் விற்பனைப் பகுதிகளில் மாசடையும் வகையில் களஞ்சியப்படுத்தப்பட்ட பொருட்கள் அழிக்கப்பட்டதோடு வழக்குத் தாக்கல் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பழ விற்பனை நிலையங்கள் சோதனையிடப்பட்ட போது, அங்கு பழங்களைப் பழுக்க வைக்கப் பயன்படுத்தும் இரசாயனங்கள் தெளிகருவிகளுடன் கண்டு பிடிக்கப்பட்ட நிலையில் குறித்த பழ வியாபாரிகளுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு பாதுகாப்பான முறையில் பழங்களைப் பழுக்க வைக்கும் முறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

# வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தில் இயங்கும் மாவட்டத் தொழில் நிலையமானது யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள நிறுவனங்களின் தொழில் வெற்றிடங்களுக்கான கோரிக்கைகளை பெற்றுக் கொண்டுள்ளது.

மேற்படி நிறுவனங்களின் தொழில் வெற்றிடங்களுக்கான கோரிக்கையின் அடிப்படையில் தொழில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்பதாக மாவட்டச் செயலகத்தில் இயங்கும் மாவட்டத் தொழில் நிலையத்தில் நேரடியாகச் சென்று தங்களைப் பதிவு செய்து கொள்ள முடியும்.

தொழில் வெற்றிடங்கள் அலுவலகம் மற்றும் வெளிக்களம் சார்ந்ததாக காணப்படுவதால் தொழில் தேடுவோருக்கு மிகவும் பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் அமையும் என்பதால் மேற்படி சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி பயனடையுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# புதிதாக அமுல்படுத்தப்படவுள்ள மீனவ சட்டம் நிறுத்தப்பட வேண்டும்

(மன்னார்)

புதிதாக கொண்டுவரப்படவுள்ள மீனவ சட்டம் நிறுத்தப்பட வேண்டும் என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளர் ஹேமன் குமார தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்

அரசாங்கத்தினால் கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டம் மீனவர்கள் மத்தியில் கொண்டு வரப்பட்டு அவர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டும். இது மிகவும் ஆபத்தானது.

எனவே அந்த சட்டத்தில் உள்ள குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டு குறித்த சட்டம் முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும். அதனை நிறைவேற்றுவதாக இருந்தால் மீனவர்கள் மத்தியில் கருத்து பரிமாற்றத்திற்கு உள்ளாக்கி அதில் பல விடயங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

அதே நேரம் புதிய பட்ஜெட்டில் மீனவர்களுக்கான எந்த ஒரு திட்டமும் உள்வாங்கப் படவில்லை. இது தொடர்பாக அனைவரும் பேச வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். (நி-5-6-285)

# காற்றழுத்த தாழமுக்கத்தால் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை கனமழை

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில்நேற்று உருவான தாழமுக்கத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை கன மழைக்கு வாய்ப்பு உள்ளது என யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் காலாநிதி.நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு கடற் பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்வதில் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-5-6-33)

# கந்தசஷ்டி விரதாரம்பம்

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரதம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலும் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

காலை 9 மணிக்கு சிவலிங்க பூஜையும் 10 மணிக்கு காலசந்தி பூஜையும் 10.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் நடைபெறவுள்ளன. சாயரட்சை பூஜை மாலை 3.45 மணிக்கும் 2ஆம் காலசந்தி பூஜை 4 மணிக்கும் தொடர்ந்து 4.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சூர சம்ஹார உற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளன. (நி-5-6-33)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்.பொதுசன நூலகமும் உள்ளூர் புத்தக சாலைகளும் இணைந்து நடத்தும் கண்காட்சியும் விற்பனையும் நாளை புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம் 4.30 மணி வரை யாழ். மாநகரசபை பொதுசன நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள குறித்த நிகழ்வுகள் 16,17 ஆகிய இரு திகதிகள் வரை நடைபெறும். (நி-5-6)



இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் கணக்கியல் துறையினால் நடத்தப்பட்ட சர்வதேச கணக்கியல் நாள் நிகழ்வுகள் அண்மையில் யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது.

# கைகலப்பில் முடிந்த மோதல் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் மூன்று இளைஞர்கள் காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில்,

இரு குழுக்களுக்கிடையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற குழு மோதலில் மூன்று இளைஞர்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)




தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நேற்று இடம்பெற்ற கௌரி விரத இறுதி நாள் நிகழ்வுகள். (படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.க ஒத்துழைத்தால் மட்டுமே அரசாங்கத்தை நடத்தி செல்லலாம்

## அமைச்சர் மஹிந்த அமரவீர



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே அரசாங்கத்தை நடத்திச் செல்ல முடியும் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் ஒன்றை நடத்தி செல்ல மொட்டுக் கட்சியின் ஒத்துழைப்பு அவசியம். அதே போன்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இல்லாவிட்டாலும் அரசாங்கத்தை நடத்திச் செல்ல முடியாது.

நாங்கள் இல்லாவிட்டால் 113 இல்லை. யாரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு செல்லும் வேலைத்திட்டத்திற்கு ஜனாதிபதி செல்வார்.

ஆனால் எங்களை ஒருபுறம் வைத்துவிட்டு செல்ல முயற்சித்தால் அரசாங்கம் என்ற ஒன்று இல்லை.

அதிகமானோர் தற்போது மொட்டுக்கட்சியில் இருந்தும் விலகி இருக்கின்றார்கள்.

மொட்டுக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் தற்போது ஜனாதிபதியுடன் ஒன்று சேர்ந்துள்ள தரப்பினரும் ஒன்றிணைந்தால் மட்டுமே முறையாக ஆட்சியை நடத்த முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# அரிசி பதுக்கியவருக்கு அபராதம் விதிப்பு

## அரிசியும் பறிமுதல்

(கொழும்பு)

3,54,000 பெறுமதியான 1,365 கிலோ கிராம் கீரிச் சம்பா அரிசியை பதுக்கி வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட பல்பொருள் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவருக்கு அத்தனகல்ல நீதிவான் மஞ்சுள கருணாரத்ன ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்ததுடன் அரிசியைப் பறிமுதல் செய்யவும் உத்தரவிட்டார்.

நிட்டம்புவ நகரிலுள்ள பல்பொருள் அங்காடி நிலைய உரிமையாளர் ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத்தை செலுத்தாவிட்டால் 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டது.(நி-5-6)

# இலங்கையை வந்தடைந்த சொகுசுக் கப்பல்

(கொழும்பு)

பஹாமாஸ் கொடியுடனான ரிசிலியண்ட் லேடி என்ற சொகுசு கப்பல் இலங்கையை வந்தடைந்துள்ளது.

குறித்த கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

மேலும் 278 மீற்றர் நீளம் கொண்ட இந்த கப்பல் 2 ஆயிரத்து 324 பயணிகள், மற்றும் ஆயிரத்து 145 பணியாளர்களுடன் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளது. (நி-5-6)

# வெளிநாட்டு பணவனுப்பல் மூலம் இலங்கைக்கு 517.4 மில்லியன் டொலர்

(கொழும்பு)

கடந்த ஒக்டோபர் மாதத்தில் வெளிநாட்டு பணவனுப்பல் மூலம் 517.4 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார டுவிட்டர் பதிவொன்றில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், தாம் அமைச்சராக கடமைகளைப் பொறுப்பேற்ற, 2022 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இந்த வருடத்தின் ஒக்டோபர் மாத இறுதி வரை வெளிநாட்டு பணவனுப்பல் மூலம் 7.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (நி-5-6)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2024 ஆம் ஆண்டிற்கான 1 ஆவது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2024.01.01ஆம் திகதி தொடக்கம் 2024.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 14.11.2023 -27.11.2023 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 28.11.2023 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 28.11.2023 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,983,100.00 | |
| 2 | சுன்னாகம் பொதுச் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 477,300.00 | |
| 3 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 173,500.00 | |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 391,120.00 | 250.00 |
| 5 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 52,500.00 | 250.00 |
| 6 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 263,100.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 210,000.00 | 250.00 |
| 8 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 64,850.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை | 3,000.00 | 30,000.00 | 28,942,900.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 2,577,300.00 | |
| 3 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 52,700.00 | |
| 4 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 830,600.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 70,400.00 | |
| 6 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 60,500.00 | |
| 7 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 389,100.00 | 250.00 |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| | | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 258,650.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு பொதுச்சந்தை | 750.00 | 7,500.00 | 656,250.00 | |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2023.12.12ஆம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2023.12.12 ஆம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. அரசினால் வரி விதிக்கப்படும் பட்சத்தில் அத்தொகையும் செலுத்தப்படவேண்டும்.
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொதுமலசலகூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப்பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்கமேல்மூலையில் குத்தகை விபரத்தினைக் குறிப்பிட்டு மூலப் பிரதியினை **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
14. இணுவில் வாராந்தச் சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத்தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
15. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி. சாரதா உருத்திரசம்பவன்,**
**செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(சி-7625) **14.11.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# ஆப்கானிஸ்தான் அகதிகளால் நெருக்கடி உருவாகும் அபாயம்

## சர்வதேச மீட்புக்குழு



(காபூல்)

பாகிஸ்தானில் இருந்து வரும் ஆப்கானிஸ்தான் அகதிகளால் மனிதாபிமான நெருக்கடி உருவாகும் சாத்தியம் காணப்படுவதாக சர்வதேச மீட்புக் குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு மேலதிக மனிதாபிமான உதவிகள் உடனடியாகத் திரட்டப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

பாகிஸ்தானில் வசிக்கும் ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான் குடியேற்ற வாசிகள் பாகிஸ்தான் அரசின் உத்தரவின்படி மீண்டும் ஆப்கானிஸ்தானுக்கு குடிபெயர்ந்துள்ளனர்.

இது எதிர்காலத்தில் கடுமையான மனிதாபிமான நெருக்கடியை உருவாக்கும் என்று சர்வதேச மீட்புக் குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலைமை சீராகும் வரை பாகிஸ்தானில் இருந்து வரும் குடியேற்ற வாசிகளுக்கு ஆதரவளிக்குமாறு அண்டை நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தான் இந்த முடிவை எடுத்தது விசித்திரமானது.

இந்த தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் தான் காரணம் என பாகிஸ்தான் குற்றம் சாட்டியது. ஆனால் ஆப்கானிஸ்தான் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

எனினும், பாகிஸ்தானின் இந்த திடீர் நடவடிக்கைக்கு பல மனித உரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. (நி-5-6)

# கடவுச்சீட்டு வழங்குவதை நிறுத்திய பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)



கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தானில் லேமினேஷன் பேப்பர் தட்டுப்பாடு காரணமாக புதிய கடவுச்சீட்டு வழங்குதை பாகிஸ்தான் நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடவுச்சீட்டுகளுக்குப் பயன்படுத்தப்படும் காகிதத்தை பாகிஸ்தான், பிரான்சில் இருந்து இறக்குமதி செய்கிறது.

இந்நிலையில் வெளிநாடுகளுக்கு செல்ல கடவுச்சீட்டு பெற காத்திருக்கும் மாணவர்கள் மற்றும் வேலை அல்லது ஓய்வுக்காக பயணம் செய்யத் திட்டமிடுபவர்கள் உட்பட பலர் இத் தாமதத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை நிலைமை விரைவில் கட்டுக்குள் வரும் என அரசு உறுதி அளித்துள்ள நிலையில், பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

இதற்கிடையில், பெஷாவரில் உள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், 3000 முதல் 4000 கடவுச்சீட்டுகள் வந்த நிலையில் தற்போது தினமும் 12 முதல் 13 கடவுச்சீட்டுக்களை மட்டுமே அச்சிட முடிகிறதாக கூறியுள்ளார்.

அதேவேளை , பாகிஸ்தானில் இதுபோன்ற நெருக்கடி ஏற்படுவது இது முதல் முறையல்ல. கடந்த 2013 ஆம் ஆண்டில், அச்சுப்பொறிகள் மற்றும் லேமினேஷன் பேப்பர்களின் பற்றாக்குறை காரணமாக கடவுச்சீட்டு அச்சிடுதல் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# மற்றுமொரு உலக கின்னஸ் சாதனை படைத்த துபாய்

(அபுதாபி)



உலகின் மிகப் பெரிய எல்.இ.டி ஒளியூட்டப்பட்ட ஒட்டகத்தின் சிற்பத்தை உருவாக்கி துபாய் புதிய கின்னஸ் சாதனையை படைத்துள்ளது.

துபாய் - ரிவர்லேண்ட்டில் அமைந்துள்ள துபாய் பார்க்ஸ் அண்ட் ரிசார்ட்ஸில் 7 மீற்றர் உயரமான இந்த சிற்பம், ஐக்கிய அரபு அமீரகத்தின் வளமான பாரம் பரியத்தில் ஒட்டகத்தின் முக்கியபங்கை பிரதிபலிக்கிறது. இதேவேளை, ஒட்டகங்கள் அமீரகத்தின் கலாச்சாரம், வரலாறு மற்றும் அடையாளம் ஆகிய வற்றுடன் ஆழமாக பின்னிப் பிணைந்துள்ளன. அவை நாட்டில் குறிப்பிடத்தக்க மற்றும் மதிக்கப்படும் விலங்காகும்.

ரிவர்லேண்ட் துபாயில் கம்பீரமாக நிற்க வைக்கப்பட்டுள்ள எல்.இ.டி ஒட்டகம், ஒவ்வொரு மாலையிலும் சூரிய மறைவிற்குப் பிறகு விவாரிஸ் டோராண்டேக்கு அடுத்ததாக ஒளிரும் என்று கூறப்படுகிறது.

ஏற்கனவே, துபாய் பார்க்ஸ் மற்றும் ரிசார்ட்ஸ் இந்த ஆண்டின் தொடக்கத்தில் JumpX அறிமுகப்படுத்திய உலகின் மிகப்பெரிய காற்றினால் நிரப்பப்பட்ட பவுன்சி கோட்டையை நிறுவி கின்னஸ் உலக சாதனை படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

துபாய் பார்க்ஸ் மற்றும் ரிசார்ட்ஸ், அதன் விருந்தினர்களுக்கு இதுபோன்ற மறக்க முடியாத அனுபவங்களை உருவாக்குவதோடு, துபாய் கேமல் ரேசிங் கிளப் போன்ற நிறுவனங்களுடன் எதிர்கால சாத்தியமான ஒத்துழைப்புகளையும் உருவாக்குவதில் தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# கனடாவுக்கு எதிரான ஆயுதமாக பொருளாதார விடயங்களை பயன்படுத்தமாட்டோம்

## சீனா உறுதி

(பீஜிங்)

ராஜதந்திர ரீதியிலான முரண்பாடுகளுக்காக கனடாவை வர்த்தக ரீதியில் தண்டிக்கப் போவதில்லை என சீனா அறிவித்துள்ளது.

கனடாவின் உள்விவகாரங்களில் சீனா தேவையின்றி தலையிடுவதாக கடந்த சில காலங்களாக குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கனடாவின் பொதுத் தேர்தல்களில் சீனா தலையீடு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் கனடாவிற்கான சீனத்தூதுவர் கொங் பியூவ் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளில் விரிசலை ஏற்படுத்தியிருந்தது.

முரண்பாட்டு நிலையினால் கனேடிய இறைச்சி வகைகள் மற்றும் கனோலா எண்ணெய் இறக்குமதிக்கு சீனா தடை விதித்தது. கனடாவிற்கு எதிரான ஓர் ஆயுதமாக பொருளாதார விவகாரங்களை பயன்படுத்த போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மீண்டும் சரியான பாதைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார். (நி-5-6)

# மருத்து...
# உடன் நி...

(காசா) ——

காசாவில் உள்ள மரு...
நடத்தி வரும் நிலையி...
அனைத்தையும் இஸ்...
ஒருவர் வலியுறுத்தியு...



இஸ்ரேல் இராணுவத்துக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையிலான போர் ஒரு மாதத்திற்கு மேலாக நீடித்துக் கொண்டிருக்கிறது. போர் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வரும் நிலையில், கான் யூனிஸில் உள்ள அல்-நாசர் மருத்துவமனைக்கு

வெளியே...
செய்தியா...
காசாவை...
வர் ஒரு...
அப் போ...
மருத்துவ...
ரேல் நட...
குற்றங்க...
நிறுத்துவ...

காசாவில் இதுவ...

# 60 இற்கும் மே...
# பள்ளிவாசல்கள் அ...



(காசா)

முற்றுகையிடப்பட்ட காசா நகரின் சப்ரா பகுதியில் உள்ள அல்-சலாம் பள்ளிவாசலில் இஸ்ரேலிய விமானம் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த மாதம் 7 ஆம் திகதி முதல் இஸ்ரேலிய படைகளால் அழிக்கப்பட்ட

மொத்த பள்...
எண்ணிக்...
அதிகமாக...
என்று அற...
றது.
வழிபாட்...
சர்வதேச ...
சட்டத்தின் கீ...
சொத்தாகப்...
தகுதிபெறுக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவமனைகள் மீதான தாக்குதல்களை நிறுத்துங்கள்- காசா மருத்துவர்

ள்ள மருத்துவமனைகள் மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல் நிலையில், மருத்துவமனைகள் மீதான 'போர்க் குற்றங்கள்' ம் இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்று காசா மருத்துவர் றுத்தியுள்ளார்.





வெளியே நடைபெற்ற ஒரு செய்தியாளர் சந்திப்பின்போது, காசாவைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

அப்போது அவர், காசா மருத்துவமனைகள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் 'போர்க் குற்றங்கள்' அனைத்தையும் நிறுத்துவதற்கு சர்வதேச் சமூகத்தை வலியுறுத்துமாறு கேட்டு க்கொள்கிறேன். நாங்கள் இப்போது உலக மக்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். உங்களுடைய மனசாட்சி விழித்திருக்கிறது என்றால், தயவுசெய்து இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவும். மருத்துவமனைகள் மீது நிகழ்த்தப்படும் இத்தகைய போர்க் குற்றங்களைத் தடுத்து நிறுத்த முன்வராத உலகின் எந்தவொரு அரசியல்வாதியும், தன்னுடைய கரங்களில் இரத்தக்கறை படிந்திருப்பதை மறந்துவிடக் கூடாது.

தற்போது காசா நகரில் உள்ள அல்-ஷிஃபா மருத்துவமனை முற்றுகையிடப்பட்டுள்ளது. மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் இல்லை. தண்ணீரும் மின்சார வசதியும் கிடையாது. மருத்துவமனைகளின் கதவுகள் திறந்தே உள்ளன. ஆனால், எங்களால் நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளை வழங்க முடியவில்லை. தற்போது போர் நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறான போர்க்குற்றங்களை நாம் தொடர முடியாது எனத் தெரிவித்தார்.

இஸ்ரேல் இராணுவம் லெபனான் எல்லைக்குள் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தியதாக அந்நாட்டின் அதிகாரபூர்வ ஊடகம் தெரிவித்துள்ளது. காசா அல்-ஷிஃபா மருத்துவமனையில் உள்ள புதைகுழியில் 100 உடல்களை அடக்கம் செய்திருப்பதாக பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். "மருத்துவமனையைச் சுற்றி இஸ்ரேல் தொடர்ந்து குண்டுவீசி வருகிறது. இதனால், மருத்துவமனைக்குள் அம்புலன்ஸ்கள் நுழைவதற்கும், வெளியேறுவதற்கும் தடையாக உள்ளது. நாங்கள் அல்-ஷிஃபா வளாகத்துக்குள் சிக்கியுள்ளோம்" என்று பாலஸ்தீன சுகாதார அமைச்சகத்தின் இயக்குநர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

காசாவின் மிகப் பெரிய மருத்துவ வளாகமான அல்-ஷிஃபா மருத்துவமனையில் எரிபொருள் தீர்ந்துவிட்டதால் அனைத்து செயற்பாடுகள்ளையும் நிறுத்தி வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய இராணுவம் அல்-ஷிஃபா மருத்துவமனை மீது வெள்ளை பொஸ்பரஸைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தி வருவதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார். கடந்த இரண்டு நாட்களில் காசாவில் உள்ள 1,00,000 பாலஸ்தீனிய மக்கள் தெற்கு பகுதியை நோக்கி நகர்ந்துள்ளதாக இஸ்ரேல் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 7 முதல் காசா மீதான இஸ்ரேலிய தாக்குதல்களில் இதுவரை 11,078 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலில் ஹமாஸ் போராளிகள் நடத்திய திடீர் தாக்குதலில் சுமார் 1,400 இஸ்ரேலியர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## நிதுவரை மேற்பட்ட கள் அழிப்பு



மொத்த பள்ளிவாசல் களின் எண்ணிக்கை 60 இற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது என்று அறிக்கை கூறுகிறது.

வழிபாட்டுத் தலங்கள் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் ஒரு கலசாரச் சொத்தாகப் பாதுகாப்பதற்குத் தகுதிபெறுகின்றன.(நி-5-6)

# யூத செயற்பாடுகளை கண்டித்து பிரான்ஸில் போராட்டம்




(பாரிஸ்)

யூத விரோத நடவடிக்கைகளை கண்டித்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

காசாவில் இஸ்ரேல் - ஹமாஸ் போருக்கு இடையில் யூத விரோதம் பல நாடுகளில் அதிகரித்து வருகிறது. சில இடங்களில் யூத மக்களை தாக்கும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இந்த நிலையில் யூத விரோதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பாரிஸ் வழியாக பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிவகுத்து சென்றனர்.

அவர்களுடன் பிரதமர் எலிசபெத் போர்ன், பல இடதுசாரி கட்சிகளின் பிரதி நிதிகள் மற்றும் தீவிர வலதுசாரி தலைவர் மரின் லு பென் ஆகியோர், பலத்த பாதுகாப்புக்கு இடையில் கலந்து கொண்டனர்.

பிரான்சின் முன்னாள் ஜனாதிபதிகளான பிரான் சுவா ஹாலண்டே மற்றும் நிக்கோலஸ் சர்கோசி ஆகியோரும் இந்த அணி வகுப்பில் கலந்து கொண்டனர்.

இந்த பேரணியில் ஜனாதிபதி இமானுவல் மேக்ரோன் கலந்துகொள்ளவில்லை. எனினும் அவர் தனது ஆதரவினை ஆர்ப்பாட்டத்திற்கு வெளிப்படுத்தினார். அத்துடன் "கட்டுப்பாடற்ற யூத விரோதத்தின் தாங்க முடியாத மீள் எழுச்சிக்கு எதிராக குடிமக்கள் எழ வேண்டும்" என அழைப்பு விடுத்தார். ஐரோப்பாவிலேயே அதிக யூத மக்கள்தொகையை பிரான்ஸ் கொண்டுள்ளதாக யூத கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் கூறுகிறது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மயிலத்தமடு பகுதியில்

# அத்துமீறி குடியேறியவர்களை வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் அரச காணியில் அத்துமீறி குடியேறியவர்களை வெளியேறுமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி அன்வர் சதாத் நேற்று கட்டளை பிறப்பித்தார்.

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பகுதியில் மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான அரச காணியில் அத்துமீறி குடியேறியதாக தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் நீதிமன்றில் மகாவலி அதிகார சபையினால் கடந்த மாதம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தீர்ப்புக்காக மன்றுக்கு எடுக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனைப் பகுதியில் அத்துமீறி குடியேறியதாக தெரிவிக்கப்பட்ட 13 பேரும் நேற்று நீதிமன்றில் ஆஜராகி இருந்தனர்.

மகாவலி அதிகார சபை சார்பாக மன்றுக்கு அரச சட்டத்தரணி டில்கானி டி சில்வா ஆஜராகியிருந்தார். கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற குறித்த வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் எந்த வகையான ஆவணமும் நீதிமன்றுக்கு அத்துமீறி குடியேறியவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களினால் சமர்ப்பிக்கப்படாததால் மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் அத்துமீறி குடியேறிய குறித்த 13 பேரையும் வெளியேறுமாறு நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அத்துமீறிய பயிர்ச் செய்கையாளர்களை அகற்றுமாறு கோரி அப்பகுதி கால்நடை பண்ணையாளர்கள் 60 ஆவது நாளாக நேற்றும் போராட்டம் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# அரசாங்கத்தின் உட்கட்சிப் பூசல்களுக்கு விளையாட்டைப் பயன்படுத்தக் கூடாது

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

கிரிக்கெட் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிரிக்கெட் நிர்வாகிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு இடையிலான பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணாவிட்டால் கிரிக்கெட் வீரர்களுக்கே பாதிப்பு அதிகம்.

விளையாட்டுத்துறை அமைச்சராக தான் கடமையாற்றிய காலத்தில் நிர்வாக பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட்டதாகத் தெரிவித்தார். அரசியல் மற்றும் நிர்வாகப் பிரச்சினையால் இலங்கை கிரிக்கெட்டை சர்வதேச கிரிக்கெட் பேரவை இடைநிறுத்தியுள்ளது.

இவ்வாறு இடைநிறுத்தப்படுவதனால் வருடாந்தம் கிடைக்கப் பெறும் நூறு மில்லியன் டொலர் நேரடி மற்றும் மறைமுக வருமானத்தை இழக்க நேரிடுவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

குறிப்பாக அரசாங்கத்தின் உட்கட்சிப்பூசல்களுக்கு விளையாட்டை பயன்படுத்தி தீர்வு காண முயற்சிக்கக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார். (நி-5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 500 | 600 |
| தக்காளி | 260 | 300 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 150 | 150 |
| கோவா | 320 | 300 | 300 | 400 |
| கரட் | 450 | 400 | 450 | 500 |
| பூசணி | 100 | 80 | 80 | 120 |
| புடோல் | 240 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 260 | 250 | 300 |
| பாகற்காய் | 550 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 240 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 450 | 600 |
| லீக்ஸ் | 280 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | 550 | 300 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 450 | 450 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 420 | 380 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 150 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 95 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 | 550 |
| வெங்காயப்பூ | 450 | 350 | — | 480 |
| முள்ளங்கி | 120 | 150 | — | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 150 | 200 |

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2964

மாதவி




றெமில்ரன்




உதயா




அறிவழகன்




சஸ்மியா




றொக்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைப்பிலிடப்பட்ட உரமானிய கொடுப்பனவுகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போதைய பெரும்போக செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் ஐயாயிரத்து 760 பேருக்கு உரத்திற்கான மானியக் கொடுப்பனவுகள் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, இராமநாதபுரம், அக்கராயன்குளம், முழங்காவில், கண்டாவளை, பரந்தன், பூநகரி, பளை மற்றும் உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் பெரும்போகத்தில் ஈடுபட்டுள்ள ஐயாயிரத்து எழுநூற்று அறுபது விவசாயிகளுக்கு மானிய உரத்திற்கான கொடுப்பனவுகள் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன.(நி-5-6-315)

# தீபாவளியை முன்னிட்டு தபால் முத்திரை வெளியீடு




(குருமன்காடு)

தேசிய தீபாவளி தினத்தை முன்னிட்டு வவுனியாவில் தபால் முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது. வவுனியா, கந்தசாமி ஆலய பிரதான மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தேசிய தீபாவளி நிகழ்வில் இத் தபால் முத்திரை இலங்கை தபால் திணைக்கள அத்தியட்சகர் றுவான் சரத்குமார் வெளியிட்டு வைக்க முதல் முத்திரையை இந்து கலாசார அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து அதிதிகளாக கலந்து கொண்ட கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர ஆகியோருக்கு தபால் முத்திரை வழங்கி வைக்கபட்டதுடன், மதகுருமாருக்கும் வழங்கப்பட்டது. (நி-5-6-250)

# கரும்புள்ளியான் வீதிகளின் வடிகால்கள் புனரமைப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கரும்புள்ளியான் கிராமத்திலுள்ள கிராமிய வீதிகளின் வடிகால்கள் பிரதேச சபையினால் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றன.

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கரும்புள்ளியான் கிராமத்தில் இயற்கையாக அமைந்திருக்கும் மழைநீர் வடிகால் அமைப்புகளில் நீர்த் தேக்கம் உண்டாவதனால் டெங்கு போன்ற தொற்று நோய்கள் ஏற்பட காரணமாகின்றது. தொற்றுநோய்கள் பரவுவதை தவிர்த்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதற்காகவும் வீதி விபத்துக்களை தவிர்த்து பாதுகாப்பான போக்குவரத்தினை பிரதேச மக்கள் மேற்கொள்வதற்கும் சபை செயலாளரின் வழிகாட்டலின் கீழ் கரும்புள்ளியான் வட்டாரத்தில் 8ஆம் வீதியில் அமையப்பெற்றுள்ள இயற்கை மழைநீர் வடிகால் அமைப்புகளை சபை கனரக வாகனங்களை பயன்படுத்தி சபை ஊழியர்களினால் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. (நி-5-6-315)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி
## சபைக்குச் சொந்தமான கடைகளை 01.01.2024 - 31.12.2024 காலப்பகுதிக்கு
## தற்காலிகமாக மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலப்பகுதி :- 14.11.2023 - 27.11..2023 திகதி பி.ப 3.00 மணிவரை.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 28.11.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை.

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 28.11.2023 ஆம் திகதி மு.ப 10.15 மணிக்கு.

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- பொதுமண்டபம், தலைமை அலுவலகம், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை.

| தொ. இல | கடை விபரம் | ஆகக் குறைந்த மாத வாடகைத் தொகை (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | நெல்லியடி நவீனசந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்தளம் கடை இல UF 18 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 2 | நெல்லியடி நவீனசந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்தளம் கடை இல UF 19 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 3 | நெல்லியடி நவீனசந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்தளம் கடை இல UF 20 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 4 | நெல்லியடி நவீனசந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்தளம் கடை இல UF 21 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 5 | நெல்லியடி நவீனசந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்தளம் கடை இல UF 26 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 6 | நெல்லியடி நவீனசந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்தளம் கடை இல UF 27 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 7 | சாண்டாசந்தை வளாகத்தில் அமைந்துள்ள கீழ்தளம் கடை இல 01 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 8 | சாண்டாசந்தை வளாகத்தில் அமைந்துள்ள கீழ்தளம் கடை இல 02 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 9 | சாண்டாசந்தை வள்ாகத்தில் அமைந்துள்ள கீழ்தளம் கடை இல 03 | 4,000.00 | 750.00 | 2,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, அத்தாய் கரவெட்டி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் கோரிக்கைக் கடிதத்தினையும் தமது அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் சபை நிதிக்கு மாற்றுவதுடன் இவரின் பெயர் தவறுநர் பட்டியலில் சேர்க்கப்படும்.

05. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

06. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விதாரர் பாதுகாப்பு வைப்புப் பணமாக தமது கேள்வித் தொகையின் 3 மாத வாடகைத் தொகையை ஒரே தடவையில் முற்பணமாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதி மாத வாடகைத் தொகையினை **2024** ஜனவரி தொடக்கம் செப்ரெம்பர் வரை ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக 9 தவணைகளில் செலுத்துதல் வேண்டும். தவறும் பட்சத்தில் குறித்த தொகையின் 10% தொகையினை மேலதிகமாக மாதாந்த வாடகைத் தொகையுடன் சேர்த்து செலுத்துதல் வேண்டும். 10 ஆம் திகதி விடுமுறை தினமாக வரும் பட்சத்தில் அடுத்துவரும் வேலைநாளில் தவணைப்பணம் தண்டமின்றி அறவிடப்படும். தங்களால் செலுத்தப்படும் கேள்வித்தொகை எக்காரணம் கொண்டும் தங்களிற்கு மீளளிக்கப்படமாட்டாது.

07. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையும் மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் ஏனைய வரியும் மாதாந்தம் பணமாக செலுத்துதல் வேண்டும்.

08 மாதாந்த வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்தல் வேண்டும். தவறின் கட்டுப்பணத்தின் 10% தண்டப்பணம் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

09. முற்குறிப்பிட்ட 7, 8 ஆவது நிபந்தனையின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.

10. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. வாடகை உடன்படிக்கையாளரால் இக்கடை தொடர்ந்து சபையின் அனுமதியின்றி 02 மாதத்திற்கு மேல் வியாபாரம் செய்யாது பூட்டப்பட்டிருந்தால் ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டு கடையினை மீள பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

13. சித்திகரக் குத்தகைதாரர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.

14. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு .கணேசன் கம்ஸநாதன்,**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**
**2023.11.14**

(சி-7626)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 329





இவ்விதம் சொல்லிவிட்டுச் சுந்தரசோழர் தம் பார்வையை எங்கேயோ தூரத்தில் செலுத்தி வெறித்துப் பார்த்தார். அவர் பார்த்த திக்கில் ஒன்றுமே இல்லைதான்! ஆயினும் அவருடைய உடம்பு நடுங்குவதைக் குந்தவை கண்டாள். எல்லையற்ற இரக்கம் அவர் பேரில் அவளுக்கு உண்டாயிற்று. கண்களில் நீர் ததும்பியது. தந்தையின் மார்பில் தன் முகத்தைப் பதித்துக் கொண்டு கண்ணீர் விட்டாள். அதனால் அவருடைய நடுக்கமும் குறைந்ததாகத் தோன்றியது. பிறகு தந்தையை நிமிர்ந்து நோக்கி, "அப்பா! இந்தப் பயங்கரமான வேதனையைப் பல வருஷகாலம் தாங்கள் மனத்திலேயே வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டிருக்கிறீர்கள். அதனாலேதான் தங்கள் உடம்பும் சீர்குலைந்து விட்டது. இப்போது என்னிடம் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? இனிமேல் தங்கள் உடம்பு சரியாகிப் போய்விடும்" என்றாள்.

சுந்தரசோழர் அதைக் கேட்டுச் சிரித்த சிரிப்பின் ஒலியில் வேதனையுடன் கூட அவநம்பிக்கையும் கலந்திருந்ததேன்? என அவர் கூறினார்:

"குந்தவை! நீ நம்பவில்லை. மாண்டவர்கள் மீண்டும் வருவார்கள் என்று நீ நம்பவில்லை. ஆனாலும் அதோ அந்தத் தூணுக்குப் பக்கத்தில் குத்து விளக்கின் பின்னால், அந்தப் பாவியின் ஆவி நேற்று நள்ளிரவில் நின்றது. என் கண்ணாலேயே பார்த்தேன். அதை எப்படி நம்பாமலிருக்க முடியும்? நான் கண்டது வெறும் பிரமை என்றால், உன் தோழியைப் பற்றி என்ன சொல்வாய்? அவள் எதையோ பார்த்துக் கேட்டதனால் தானே நினைவு தப்பி விழுந்தாள்! அவளை அழைத்து வா, குந்தவை! நானே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்!" என்று சுந்தர சோழர் பரபரப்புடன் கூறினார்.

"அப்பா! வானதி ஒரு பயங்கொள்ளிப் பெண்! கொடும்பாளூர் வீரவேளிர் குலத்தில் இவள் எப்படிப் பிறந்தாளோ, தெரியவில்லை. இருட்டில் தூணைப் பார்த்தாலும், அவள் அலறியடித்துக் கொண்டு மயக்கமாய் விழுவாள். அவளைக் கேட்பதில் யாதொரு பயனும் இல்லை. அவள் ஏதும் பார்த்திருக்கவும் மாட்டாள் கேட்டிருக்கவும் மாட்டாள்."

"அப்படியா சொல்கிறாய்? அவள் போனால் போகட்டும். நான் சொல்ல வேண்டியது மிச்சத்தையும் கேள்! மாண்டவர்கள் மீண்டு வருவார்கள் என்பதில் எனக்கும் வெகுகாலம் நம்பிக்கை இல்லாமல்தானிருந்தது. அப்படிப்பட்ட தோற்றம் என்னுடைய வீண் மனப் பிரமை என்றே நானும் எண்ணியிருந்தேன். காவேரி நதியில் நாம் எல்லாருமாக ஓடத்தில் போய்க்கொண்டிருந்தபோது குழந்தை அருள்மொழிவர்மன் திடீரென்று காணாமற் போனது உனக்கு நினைவிருக்கிறதல்லவா? நாம் எல்லாரும் திகைத்தும் தவித்தும் நிற்கையில் ஒரு பெண்ணரசி பொன்னி நதி வெள்ளத்திலிருந்து குழந்தையை எடுத்துத் தூக்கிக் கொடுத்தாள். குழந்தையை மற்றவர்கள் வாங்கிக் கொண்டதும் அவள் மறைந்துவிட்டாள். இதைப் பற்றி நாம் எவ்வளவோ தடவை பேசியிருக்கிறோம். நீ மறந்திருக்கடியாது. நீங்கள் எல்லாரும் காவேரியம்மன்தான் குழந்தையைக் காப்பாற்றியதாக முடிவு கட்டினீர்கள். ஆனால் என் கண்ணுக்கு என்ன தோன்றியது தெரியுமா? அந்த வலைஞர் குலமகள் ஊமைச்சி தான் குழந்தையை எடுத்துக் கொடுத்ததாகத் தோன்றியது. அன்றைய தினமும் நான் நினைவிழந்து விட்டேன் என்பது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? குழந்தைக்கு நேர்ந்த அபாயத்தை முன்னிட்டு நான் நினைவிழந்தேன் என்று எல்லாரும் எண்ணினார்கள். ஆனால் உண்மை அதுவன்று. இத்தனை நாள் கழித்து உனக்குச் சொல்கிறேன். குழந்தையை எடுத்துக் கொடுத்த பெண்ணுருவம் அவளுடைய ஆவி உருவம் என்று எனக்குத் தோன்றியபடியால் தான் அப்படி மூர்ச்சையடைந்தேன். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## விநோத பறவையால் வாழ்ந்தது யார் வீழ்ந்தது யார்

(நேற்றைய தொடர்ச்சி)

இல்லை அவர் வரும் நேரம் ஆகிவிட்டது, என்றாள் ரஞ்சனி.

தூரத்தில் தெரியும் ஆலமரத்தில் தான் என் வீடு வா என அழைத்தது. அவளும் உடன் சென்றாள். அந்த மரத்தின் மேல் தங்கத்தால் ஆன வீடு போல ஒன்று இருந்தது. நான் இந்த வழியாக பலமுறை சென்றுள்ளேன் ஆனால் இதை பார்த்ததே இல்லையே என வியந்தாள். சரி எப்படி மேலே வருவது எனக்கு மரம் ஏற தெரியாதே என்றாள் ரஞ்சனி. பறவை உனக்கு எந்த மாதிரி ஏணி வேண்டும் என்றது. அவளுக்கு தெரிந்த ஒரே ஏணி, மரத்தால் ஆனதுதான். அவள் கேட்டது ஏணி வந்தது. அந்த வீட்டிற்குள் சென்றதும், அங்கு இருந்த மேசை, நாற்காலி என அனைத்துமே தங்கத்தால் இருந்தது. ஆச்சர்யமாக பார்த்த ரஞ்சனியிடம் நீ உணவு உட்கொள்ள என்ன வேண்டும் என்றது. எங்க அம்மா வார வழியில் வாழை இலை கொண்டு வந்து அதில் உணவு பரிமாறு வாங்க அதுதான் வேண்டும் என்றாள். திருப்தியாக சாப்பிட்டாள்.





பறவை ரஞ்சனி முன்னால் 3 பெட்டிகளை வைத்து இதில் எது வேண்டுமோ எடுத்துக்கொள். அதில் இருக்கும் பொருளை பார்த்தால் உன் அம்மா கோபபட மாட்டார்கள் என்றது. 3 பெட்டியும் ஒன்றை விட ஒன்று பெரிதாக இருந்தது. ஏற்கனவே நேரம் இல்லாத தால் இருக்கும் பெட்டி களில் சிறிய பெட்டியை எடுத்து சென்றாள் ரஞ்சனி.

வேணி ரஞ்சனிக் காக, காத்திருந்தாள். அவள் வந்ததும் நடந்ததை அம்மாவிடம் கூறினாள். அந்த பெட்டியை திறந்ததும் தங்கக் காசுகள் இருந்தன. அதை வைத்து சிறியதாக ஒரு கடையை ஆரம்பித்தார்கள். அதில் வரும் வருமானத்தை வைத்து நல்ல நிலைக்கு வந்தார்கள். இந்த விஷயம் அக்கம் பக்கம் முழுக்க பரவியது. பணியாள் வேலைக்கு சென்றவளுக்கு இப்படி ஒரு அதிஷ்டமா என நிறைய பேர் பொறாமை கொண்டார்கள். வேணியின் பக்கத்து வீட்டில் இருந்த மாயாவிற்கு எப்படியாவது இன்னும் பணக்காரியாக ஆசை வந்தது. ஒரு வாளி நிறைய தானியங்களை எடுத்துக் கொண்டு அந்த பறவைக்காக காத்திருந்தாள். அப்போது சிட்டுக்குருவி வந்தது அதை விரட்டி விட்டாள் மாயா. பிறகு காகம் வந்தது அதையும் விரட்டி விட்டாள். இறுதியாக அந்த தங்க சிறகு உள்ள பறவை வந்தது. நிறைய சாப்பிடு என வலியுறுத்தினாள் மாயா. சரி போதும் கிளம்புகிறேன் என்றது பறவை. சாப்பிட்டாய் அல்லவா சன்மானம் கொடு என கேட்க, பறவை தனது இருப்பிடத்திற்கு வர சொன்னது. மாயாவும், ஆர்வமாக போனாள். மரத்தின் அடியில் நின்றதும் பறவை ஏணியை கேட்டது. மாயா தங்க ஏணி கேட்டாள். பறவை வரவழைத்தது. சாப்பிடுவதற்கு என்ன வேண்டும் என கேட்க தங்க தட்டை கேட்டாள். அதுவும் வந்தது. முடிந்ததும் 3 பெரிய பெட்டிகளை கொடுத்து ஒன்றை எடுத்துக்கொள் என்றது பறவை. இருப்பதிலே பெரிய பெட்டியை கேட்டாள் மாயா. பறவை அதை கொடுத்து அவளை அனுப்பியது. மூன்றையும் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு சென்றாள். வீட்டுக்கு சென்றது தங்க தட்டு, வெறும் தட்டாக மாறியது. ஏணி பழைய மூங்கிலில் ஆனது போல இருந்தது. சரி பெட்டி இருக்கிறது என நிம்மதியோடு திறக்க, உள்ளே இருந்து பாம்பு சட்டென சீறியது. தலைதெறிக்க பதறி ஓடினாள் மாயா. (முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழில் 20 சதவீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிப்பு

## நீரிழிவு சிகிச்சை நிபுணர் மருத்துவர் எம்.அரவிந்தன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஏறக்குறைய 20 சதவீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன என யாழ். போதனா மருத்துவமனை நீரிழிவு சிகிச்சை நிபுணர் எம்.அரவிந்தன் தெரிவித்துள்ளார். நேற்று ஊடகங்களிற்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

வட மாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையானது மிக அண்மைக் காலங்களில் அதிகரித்துச் செல்வது ஒரு அபாய அறிகுறியாகும்.

இன்றைய கால கட்டத்தில் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் மாத்திரம் அல்லாது பாடசாலை சிறுவர்கள் மத்தியிலும் நீரிழிவு நோய்த் தாக்கமானது அதிகரிப்பது போல கர்ப்ப கால நீரிழிவு நோயினால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது.

தவறான உணவுப் பழக்க வழக்கங்கள், அப்பியாசம் அற்ற வாழ்க்கைமுறை, மனஅழுத்தம் மற்றும் தவறான பழக்கவழக்கங்கள் ஆகியன இதற்கான பிரதானமான காரணங்களாகும்.

இன்று சர்வதேச நீரிழிவுதினம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து நீரிழிவு நோயின் பிடியிலிருந்து விடு படுவதற்கு திடசங்கற்பம் பேணுவோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5-6)

# சம்பள அதிகரிப்பு மாத்திரம் போதாது பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டும்

## ரோஹித அபேகுணவர்தன

(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்கள் மாத்திரமின்றி ஏனைய மக்களும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். எனவே பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரச உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமின்றி நாட்டு மக்கள் அனைவரும்பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிப்பதை விட பொருட்களின் விலைகளைக் குறைப்பது சிறந்ததாகும்.

அதனை விடுத்து சம்பளத்தை அதிகரிப்பதாயின் அரச உத்தியோகத்தர்களது சம்பளம் மாத்திரமின்றி, தனியார் துறையினருக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

சரியாக நோயை இனங்கண்டு அதற்கு சிகிச்சையளிப்பதற்கான யோசனையையே நாம் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம்.

எமது பரிந்துரைகளை முன்வைத்திருக்கின்றோமே தவிர, பொதுஜன பெரமுன சார்பில் வரவு-செலவுதிட்டம்தொடர்பில்விசேட கலந்துரையாடல்கள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை. எவ்வாறிருப்பினும் இந்த வரவு - செலவு திட்டம் மக்களுக்கு சிறந்ததாக அமைய வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும் எனத் தெரிவித்தார். (5-6)

# அல்வாய் கொலை வழக்கு சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

(கரணவாய்)

அல்வாய் கிழக்கு பகுதியில் மூதாட்டி ஒரு வரை கழுத்து நெரித்து கொலை செய்த மூன்று சந்தேக நபர்களையும்நாளை புதன் கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித் துறை பதில் நீதவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி அல்வாய் கிழக்கு அல்வாய் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து பழனிப்பிள்ளை தில்லைராணி (வயது-89) என்ற வயோதிப மூதாட்டி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சடலத்தில் காயங்கள் காணப்பட்டதன் காரணமாகவும் பிரேத பரிசோதனை அறிக்கையில் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி பி.வாசுதேவா உடற்பாகங்களை இரசாயண பகுப்புக்கு ஆய்வுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்ட நிலையில் அவ்வீட்டில் இருந்த கணவன் மனைவி மற்றும் வீட்டு பணிப்பெண் ஆகிய மூவர் நெல்லியடி பொலிஸாரால் இம் மாதம் 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ் வழக்கு நேற்று மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டபோது பருத்தித் துறை நீதிவான் நீதி மன்ற நீதிவான் விடுப்பில் உள்ளதன் காரணமாக பதில் நீதிவான் ஏ.ஜி. அலெக்ஸ் ராஜா மூன்று சந்தேக நபர்களையும் நாளை புதன் கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.(5-6-60)

வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை - 2023

'மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்'

# பட்ஜெட்டில் பொதுஜன பெரமுனவின் கொள்கைகள் உள்ளடக்கப்பட வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

கடந்த வருட வரவு-செலவுத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்ட விடயங்களே அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் இதனை ஆராய்ந்த பின்னர் எதிர்வரும் பாராளுமன்ற விவாதத்தில் இந்த வரவு-செலவு திட்டம் தொடர்பான தமது யோசனைகளை முன்வைப்போம் என கூறியுள்ளார்.

மேலும் தமது கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொள்வாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் நிதி அமைச்சராக ஜனாதிபதி வந்துள்ள நிலையில் வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளில் தமது கொள்கைகள் இடம்பெற வேண்டும் என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (5-6)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்ளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** 18 ஆவது வி.ஐ.ஆர் இராணுவமுகாம் - தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவமுகாம்-இரணைப்பாலை, 68 ஆவது பிரிவு - டயலொக் கோபுரம்-இரணைப்பாலை, தேவிபுரம் மாதிரி கிராமம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

> காலம் கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமன்.
>
> *– இலத்தீன் சட்ட பழமொழி*

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# சிரிப்புக்குரிய கருத்துக்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்

அரசியல் தீர்வைத் தராவிட்டால் சர்வதேசத்துடன் இணைந்து களமிறங்குவேன் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தர் கூறியுள்ளார்.

தீபாவளிப் பண்டிகையையொட்டி அவர் விடுத்த வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஏலவே ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் அடுத்த தீபாவளிக்குள் தீர்வு கிடைக்கும் என அறுதியிட்டுக் கூறிய சம்பந்தர், ஏழு ஆண்டுகள் கடந்து இப்போது இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டால், சர்வதேசத்துடன் இணைந்து களமிறங்குவேன் எனக் கூறியுள்ளார்.

அண்மையில் வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இரா.சம்பந்தர் கலந்து கொள்ளவில்லை.

முதுமையின் காரணமாக ஏற்பட்ட உடல் நலக் குறைவால் அவர் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டது.

எழுந்து நடப்பதும் மற்றவர்கள் கூறுவதைச் செவிமடுப்பதும் முடியாத நிலைமைக்கு அவர் வந்துவிட்டார்.

இதுதவிர, இயற்கை உபாதைகளின் தொந்தரவுகள் வேறு.

நிலைமை இதுவாக இருக்கையில், சர்வதேசத்துடன் இணைந்து களமிறங்குவேன் என இரா.சம்பந்தர் கூறியுள்ளார் எனும் போது அவரிடம் பலமான பின்புலம் ஏதேனும் உண்டா? என்று எண்ணத் தோன்றும்.

அவ்வாறானதொரு பின்புலத்தின் தைரியத்தில்தான் இரா.சம்பந்தர் இவ்வாறு கர்ச்சித்திருக்கிறார் என்றால், அவருக்கு எந்தப் பின்புலமும் இல்லை என்பது தெட்டத்தெளிவு.

அப்படியானால் முதுமையில், தளர்ந்த உடல்நிலையில் சர்வதேசத்துடன் இணைந்து களமிறங்குவேன் என்று வெறுங்கதை கூறுகின்ற தேவை சம்பந்தர் அவர்களுக்கு ஏன்? ஏற்பட்டது என்று ஆராயும்போதுதான் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்த கருத்து இங்கு முன்னெழுகிறது.

அதாவது இரா.சம்பந்தர் அவர்கள் தனது பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கருத்தை அண்மையில் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்திருந்தார்.

இவ்வாறானதொரு கருத்தை பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் இருந்து சம்பந்தர் ஒருபோதும் எதிர்பார்த்திருக்க மாட்டார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், தான் ஆரோக்கியமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய ஒரு தேவை சம்பந்தருக்கு ஏற்பட்டது.

அதிலும் தமிழர்களின் அரசியலில் தான் உறுதியாக இருப்பதாக வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டபோதுதான்; இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இலங்கை அரசாங்கம் முன்வைக்காவிட்டால், சர்வதேசத்துடன் இணைந்து களமிறங்குவேன் என சம்பந்தர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

சரி, பரவாயில்லை. அரசியல் தீர்வு கிடைக்காவிட்டால், அரசாங்கத்துக்கு எதிராகக் களமிறங்குவது என்றால், அதற்குப் பக்கபலமாக இருக்கக்கூடிய சர்வதேச நாடுகள் எவை என்பதுதான் நம் கேள்வி.

ஆம், இலங்கைக்கு வருகை தந்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனைக் கூடச் சந்திக்க முடியாத சம்பந்தர் எந்தச் சர்வதேசத்துடன் இணைந்து களமிறங்கப் போகிறார் என்பதுதான் சிரிப்புக்குரியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைத் தீவில் 'இந்தியாவே வெளியேறு' முழக்கத்துடன் சீனசார்பு முகமது முய்ஜு ஜனாதிபதியாகத் தெரிவு

06



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீனுக்கு 2019 நவம்பரில் பணமோசடி வழக்கில் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2021 ஜனவரியில் சிறைத்தண்டனையை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது. இருப்பினும், நவம்பர் 2021 இல் யாமீனின் தண்டனையை உச்சநீதிமன்றம் ரத்து செய்தது.

ஜனாதிபதி சோலிஹ் அவர்களின் அரசாங்கம் இந்தியாவுடன் நெருக்கமான உறவைத் தொடர முயன்றது. இது முன்னாள் ஜனாதிபதிக்கு முரணானது. அப்துல்லா யாமீன் சீனாவுடன் நெருங்கிய உறவைத் தொடர்ந்தார். இந்தியாவை சிக்க வைத்தார். நாட்டின் வெளியுறவு விவகாரங்களில் நாட்டின் முந்தைய "இந்தியா-முதல் கொள்கை" நிலைப்பாட்டை சோலிஹ் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

ஏப்ரல் 2019 மாலைதீவு நாடாளுமன்றத் தேர்தலில், சோலியின் மாலைதீவு ஜனநாயகக்கட்சி (MDP) மகத்தான வெற்றியைப் பெற்றது, பாராளுமன்றத்தில் உள்ள 87 இடங்களில் 65 இடங்களை வென்றது. மாலைதீவு வரலாற்றில் தனி ஒரு கட்சி அதிக பெரும்பான்மையை பெறுவது இதுவே முதல் முறையாக இருந்தது. இவர் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையில் பதவியில் இருப்பார்.

### மாலைதீவு மொழி

திவெயி மொழி (அல்லது திவேகி மொழி) (Divehi) இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இந்தோ-ஆரிய மொழியாகும். இது மாலைதீவுகளில் சுமார் 331,000 மக்களால் பேசப்படுகிறது. மேலும் இது ஆட்சி மொழியுமாகும். திவ்வெயி மொழியானது எலு அல்லது பழைய சிங்கள மொழியின் வழித் தோன்றலாகும் என்பது ஆய்வாளரின் கருத்தாகும். பல மொழிகளின் தாக்கத்தை திவெயி மொழியில் காணலாம். இவற்றில் அரபு மொழி முக்கியமானதாகும். தமிழ், சிங்களம், மலையாளம், இந்தி, பிரெஞ்சு, ஆங்கிலம் மற்றும் பாரசீக மொழிகள் முக்கிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. தான (Thaana) எழுத்து முறையால் எழுதப்படுகிறது. இம்மொழி வலமிருந்து இடமாக எழுதப் படுகின்றது.


ஆங்கிலம் வாணிபத்துறையில் பரவலாகப் பாவனையில் உள்ளதுடன் இப்போது பாடசாலைகளிலும் போதனா மொழியாக வளர்ச்சி கண்டு வருகின்றது.

### மாலைதீவு மக்களின் பல கலாசாரங்கள்

மாலைதீவு மக்கள் பல கலாசாரங்களின் கலப்பினால் உருவானவர்களாவர். முதலாவது குடியேற்றவாசிகள் தென்இந்தியாவிலிருந்து வந்தவர்களாவார். 4 ஆம், 5 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையிலிருந்து வந்த மக்கள் அடுத்ததாக இங்கு வந்தவர்களாவார். கி.பி 12 ஆவது நூற்றாண்டில் மலாயதீவுகள், கிழக்காபிரிக்கா மற்றும் அரபு நாடுகளைச் சேர்ந்த மக்கள் இங்கு குடியேறினர். இன்றைய மாலைதீவினர் இம்மக்கள் அனைவரதும் கலப்பில் உருவான பல்கலாசாரக் கலப்பு மக்களாவர்.

இந்திய சாதி முறைக்கு ஒத்த, சில சமுதாயப்படி முறையாக்கம் இத்தீவுகளில் காணப்படுகிறது. ஆனால் அவ்வளவு இறுக்கமாகப் பின்பற்றப்படுவதில்லை. ஒருவரின் தரம், தொழில், செல்வம், இஸ்லாம் மீதான பற்று போன்ற வேறு பல காரணிகளில் தங்கியுள்ளது. சுற்றுலாத் தலங்கள் மக்கள் குடியிருப்புகள் அற்ற தீவுகளில் மட்டுமே நிறுவப்பட்டுள்ளன. உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளிடையான தொடர்புகள் விரும்பப்படுவதில்லை.

மாலைதீவுகளில் இஸ்லாம் இந்தியவாணிப சமுதாயத்தைத் தவிர்த்த ஏனைய மாலைதீவினர் சுன்னி இஸ்லாம் மதப் பிரிவை சேர்ந்தவர்களாவர். மாலைதீவில் சட்டவரைவு கிடையாது. மாறாக இஸ்லாமிய சட்டம் நேரடியாக அமுலில் உள்ளது. இஸ்லாம் மதம் வழிபாடுகளுக்கு பள்ளிவாசல்கள் முக்கிய நிலையங்களாகும். முஸ்லிம்களின் முக்கிய நாளான வெள்ளிக்கிழமைகளில் மதிய நேரத்துக்குப் பின்னர் வியாபார நிலையங்கள் மூடப்படுகின்றன. மாலைதீவில் மொத்தம் 724 பள்ளிவாசல்களும் 266 பெண்களுக்கான பள்ளிவாசல்களும் உள்ளன. மாலேயில் உள்ள பெரிய பள்ளிவாசல் பாகிஸ்தான், புருனை, மலேசியா, பாரசீகவளைகுடா பகுதி நாடுகள் இணைந்து பணவுதவி செய்து கட்டப்பட்டதாகும். இங்கு இஸ்லாமிய மையம் அமைந்துள்ளது.



மாலத்தீவு தான எழுத்து

ஐந்து வேளை தொழுகையின் போது வேலைத்தளங்களும் கடைகளும் 15 நிமிடத்துக்கு மூடப்படும். மேலும் முஸ்லிம்கள் விரதம் இருக்கும் ரமழான் மாதத்தில் சகல உணவகங்களும் பகல் வேளையில் மூடப்படும். மற்றைய இஸ்லாமிய நாடுகளுடன் நேரடித் தொடர்பைப் பல நூற்றாண்டுகளாகக் கொண்டிருக்காதபடியால் இங்கு பழைய சமயங்களின் நம்பிக்கைகள் இஸ்லாம் சமயத்தோடு சேர்த்து பேணப்பட்டுள்ளன. அசுத்த ஆவிகள் பற்றிய நம்பிக்கை இவ்வாறான ஒன்றாகும். இதற்கு இவர்கள் பல மந்திர தந்திரங்களைப் பின்பற்றுகின்றார்கள்.

### மாலைதீவு அதிபர்

மாலைதீவு ஒரு ஜனநாயக முறையிலான குடியரசு அரசாங்கத்தை கொண்டுள்ளது. குடியரசு அரசியலமைப்பு 1968 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.மற்றும் 1970, 1972 மற்றும் 1975 இல் திருத்தப்பட்டது. மாலைதீவுகளின் அரசியல் அதிபர் முறை குடியரசு என்ற சட்ட வரம்புக்குள் நடை பெறுகின்றது. அதிபர் அரசின் தலைவராகப் பணியாற்றும் அதேவேளை அவருக்கு உதவியாக அமைச்சர் சபையும் காணப்படுகின்றது. அதனை அவரே நியமிக்கும் முறையும் பின்பற்றப்படுகிறது. தேர்தல் வரும் போது மக்கள் மஜ்லிஸ் என்பது ஒருவரை நியமிக்கின்றது. பாராளுமன்றத்தில் நடைபெறும் இரகசிய வாக்கெடுப்பு மூலம் அதிபர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். எனினும் இதனை மக்கள் கருத்துக் கணிப்பு மூலம் உறுதிப்படுத்த வேண்டும். அல்லது மக்கள் அவரை நிராகரிக்கலாம்.

ஆனால் 2008 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு திருத்தத்தின்படி அவர் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஜனாதிபதி தமது மந்திரி சபையை நியமிக்கின்றார். அமைச்சராக நியமிக்கப்படுபவர் மக்கள் மஜ்லிஸ் சபை அங்கத்தவராக இருக்க வேண்டும் என்பதில்லை. அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்ட பின்பும் கூட மஜ்லிஸ் சபை அங்கத்தவராக வரமுடியும்.

அமைச்சரவை ஜனாதிபதிக்கு பொறுப்பாகவும் அவருக்கு வேண்டிய ஒத்தாசைகளை செய்கின்றது. ஆனால் எப்பொழுதுமே அமைச்சரவை ஆலோசனைகளை ஜனாதிபதி ஏற்க வேண்டுமென்பதில்லை. ஜனாதிபதி அரசியல் யாப்புக்கு அமைய நிறை வேற்று அதிகாரம் கொண்டவராக உள்ளார்.

### மாலைதீவுகளின் பாராளுமன்றம்

மாலைதீவுகளின் பாராளுமன்றம் மக்கள் மஜ்லிஸ் என அழைக்கப்படுகின்றது. இது 1957 இல் உருவாக்கப்பட்டது. இதில் 1968 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி 54 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சி முறைப் பாரளுமன்றமாகும். இவர்களில் 46 அங்கத்தவர்கள் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். மிகுதி 8 மஜ்லிஸ்கள் அதாவது பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்கள். மாலைதீவு தலைநகரமான மாலேக்கு எட்டு அங்கத்தவர்கள் உள்ளனர். ஒரு பவளத் தீவுக்கு இரண்டு ஆண்கள் வீதம் மக்கள் வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால் 2009 ஆம் ஆண்டு தேர்தலில் 77 பேர்தெரிவு செய்யப்பட்டனர்.

மாலைதீவுகள் மக்கள்கட்சி இதுவரையும் பாராளுமன்றத்தை வைத்திருந்த போதிலும் 2005 இற்குப் பிறகு பிற கட்சிகளும் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டன. சட்டம் இயற்றும் பணியில் மஜ்லிஸ் சபை பங்குபற்றுகின்றது. ஜனாதிபதியும் சட்டம் இயற்றும் பணியை பெற்றுள்ளார். மஜ்லிஸ் சபை நம்பிக்கையில்லா தீர்மானம் இயற்றி யாராவது மந்திரியை நீக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது. வேறு பெரிய அதிகாரங்கள் அதற்கில்லை.

ஜனாதிபதி முன்மொழியும் சட்டங்களை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளது. அரசியல்யாப்பு திருத்தங்கள் சம்பந்தமாக பிரத்தியேகமாக நியமிக்கப்படும் மக்கள் மஜ்லிஸ் செயற்படுகின்றது. பிர தேச வாரியாக அங்கத்தவர்களை மஜ்லிஸ்சும் ஜனாதிபதியும் நியமிக்கின்றார்கள். அரசியல்யாப்பு திருத்த பிரேரனைகளை கையாளும் இந்த விசேட மஜ்லிஸ் மாலைதீவு அரசியல்யாப்பில் ஒரு சிறப்பம்சம். அன்றாட நிர்வாகக் கடமைகளை கவனிக்க ஒரு பணிக் குழுவோ, சிவில் நிர்வாக அலுவலர்களோ இருந்தாலும் அது மற்ற நாடுகளை போன்று வலுவுள்ளதாக இல்லை. ஏனெனில் சிவில் நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று இருந்தாலும் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளுக்கு மஜ்லிஸ்சே நியமிக்கப்படுகின்றார்கள். அதனால் அரசியல் தலையீடு நிர்வாகத்தின் பல நிலைகளிலும உணரப்படுகின்றது. வி.எச்.கொலின் தமது ஆராய்ச்சியில் இத்தகையதொரு நிர்வாக் கட்டமைப்பை வேறு எந்த தென்னாசிய நாடுகளிலும் காண முடியாது என்கிறார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18ஆம் திகதி...

தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது"

மத்திய. வங்காள விரிகுடாவில் இன்று செவ்வாய்க்கிழமை தாழமுக்கம் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே இன்றைய தினம் இரவு முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக இன்று 14,15 மற்றும் 16ம் திகதி களில் பல பகுதிகளுக்கும் மிகக் கன மழைக்கு வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## கடன் பெறுவத...

விற்பது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது என தேசிய மக்கள் சக்தியின் (NPP) தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரையைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அநுரகுமார திஸாநாயக்க,

அரசாங்கம் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு மூலம் நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

அரசாங்கம் கடன் வரம்பை ஆரம்பத்தில் முன்மொழியப்பட்டதை விட மேலும் ரூ.3400 பில்லியனால் அதிகரிக்கப்போகின்றது.

நாட்டில் நிலவும் நெருக்கடிக்கு புதிய தீர்வுகளை வழங்குவதற்கு பதிலாக, ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் தமது பழைய மற்றும் தோல்வியுற்ற நடவடிக்கைகளை மீண்டும் முன்மொழிந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## ஜனாதிபதி...

வித்துள்ளார்.

வரவு செலவுத் திட்ட உரையை சமர்ப்பித்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு தேர்தல்கள் நடைபெறும் என ஜனாதிபதி ரணில் முன்னரும் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## உடனடியாக...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவு செலவு திட்டத்தில் ஆதரவளிக்கக்கூடிய நல்ல விடயங்களுக்கு தமது கட்சி ஆதரவளிக்கும்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் தமது கட்சியின் கருத்துகள் குறித்து இதுவரை கலந்துரையாடப்படவில்லை.

உடனடியாக எதனையும் கூறிவிட முடியாது. பொறுமையாக பதிலளிப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## வற் வரி...

முறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

18 சதவீதம் வரை இவ்வாறு வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி உடல்நலம், கல்வி மற்றும் சில அத்தியாவசிய உணவுகள் தொடர்பான தயாரிப்புகளைத் தவிர மற்ற அனைத்து பொருள் மற்றும் சேவைகளுக்கான வற் வரி விலக்குகளும் நீக்கப்படும்.

பொருளாதார நெருக்கடியால் நிறுத்தப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்க 55 பில்லியன் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இடம்பெற்று வரும் வரி ஏய்ப்புக்கள் உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் வரவு செலவுத் திட்டத்தில் பல முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், அரச வருமானம் அதிகரிக்கும்போது அதனை விட அதிகமான வரிச் சலுகைகளை வழங்க முடியும்.

அரசாங்க வருமானம் அதிகரித்துள்ள நிலையில், தற்போதைய நிலைவரத்துடன் ஒப்பிடுகையில் அதிக வரிச் சலுகைகளை வழங்குவதற்கு இடமுள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மூலதன...

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட திட்டங்களை நிறைவு செய்ய 55 பில்லியன் ரூபாய் மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## துண்டு விழும்...

யன் ரூபாயாகும்.

இதற்கிணங்க, வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை 2,806 பில்லியன் ரூபாய்.

அடுத்த வருடத்தில் கடனையும் வட்டியையும் செலுத்துவதற்காக அரசாங்கம் 6,919 பில்லியன் ரூபாயை செலவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி, அடுத்த வருடத்திற்கான கடன் தேவை 7,350 பில்லியன் ரூபாயாகும்.

இதற்கிணங்க, அரசாங்கத்தின் கடன் எல்லையான 3900 பில்லியன் ரூபாயை மேலும் 3450 பில்லியன் ரூபாயால் அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மய...

ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் கரவெட்டியைச் சேர்ந்த வல்வெட்டித்துறை நகர சபை உத்தியோகத்தரான இரத்தினசிங்கம் சுனித்தன் (ரகு) என்பவரே உயிரிழந்தவராவார்.

மயக்கமான நிலையில் குறித்த நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது இறந்துள்ளார்.

கரவெட்டிமரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன்சடலத்தைப் பார்வையிட்டதுடன் சட்ட வைத்திய அதிகாரி இல்லாத காரணத்தினால் மரண விசாரணைக்காக சடலம் யாழ்.போதனை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

# தனியார் பஸ் துறையினருக்கு நிவாரணம் இல்லை

இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தனியார் பஸ் தொழிற்சங்கத்திற்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என பஸ் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னர் தனியார் பஸ் சங்கங்களுடன் எவ்வித கலந்துரையாடலும் இன்றி இவ்வருட வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ம-7)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3539 — சீட்டிழுப்பு திகதி 13.11.2023 — ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 42 67 77 79 — N — 27105 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி - 2023.11.13 — சீட்டிழுப்பு இலக்கம் - 1327 — W 40 44 47 81 W — Double Chance 42356

லகி 7 — திகதி 13.11.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0123 — L7 இலக்கம் 07 — வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 8 1 4 0 6 8

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.11.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0606 — ரிஷபம் 08 12 15 25 ரிஷபம் — 03575 — 29

மெகா பவர் — திகதி 13/11/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1645 — W 15 06 43 46 63 — 58268

மஹஜன சம்பத — திகதி 2023/11/13 — சீட்டிழுப்பு இலக்கம் 5297 — S 1 9 3 4 5 5 — தேசிய லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் தன சம்பத — திகதி 13.11.2023 — வெற்றி வாரம் 005 — வர்ணம் ஊதா — S 0 3 5 7 9 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,054,092.80 — DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2271 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2023.11.13 — தினம் திங்கட்கிழமை — 06 14 27 58 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,014,740/-

சனிதா — திகதி 2023.11.13 — வெற்றி வாரம் 4432 — வர்ணம் இளம் நீலம் — 25 27 40 74 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,725,364.00 — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3983 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2023.11.13 — தினம் திங்கட்கிழமை — 09 30 45 47 மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,277,916/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — F 37 27 33 58 70 — 1447 — பச்சை — 2023.11.13 திங்கள் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 464,559,764.20

ஜயோதா Jayoda — திகதி 2023.11.13 — வெற்றி வாரம் 1973 — வர்ணம் செம்மஞ்சள் — 03 50 60 62 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,446,216.00

அத கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் : 2097 — வர்ணம் : சிவப்பு — சீட்டிழுப்பு திகதி : 2023.11.13 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,842,568/- — 10 18 41 47 B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். ஓட்டுமடத்தில்

# வீடு ஒன்றின் மீது

## பெற்றோல் குண்டு தாக்குதல்

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டுமடம் பகுதியில் உள்ள வீடு ஒன் றின் மீது நேற்று இரவு பெற்றோல் குண்டு தாக்கு தல் நடாத்தப்பட்டது.

இரு குடும்பத்தினரி டையே ஏற்பட்ட முர ண்பாடே குறித்த தாக்குதல் சம்பவத்திற்கு காரண மென முதல் கட்ட விசா ரணைகளில் தெரியவந்து ள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-7.33)

செய்யப்பட மாட்டாது எனவும்,

அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக எதிர்பார்க்கும் நோக்கங்களை உரிய காலத்தில் நிறைவு செய்ய 2024 முதல் ஒவ்வொரு அமைச்சிலும் விசேட பிரி வொன்று நிறுவப்படும் என்றும் அறி வித்தார்.

இம்முறை கொண்டுவரப்படும் வரவு செலவுத் திட்டம், நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் மற்றும் தற்போதைய சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப புதிய பொரு ளாதார அடித்தளத்தை அமைக்கும் வரவு செலவுத் திட்டமாகும். தேர்தல் வெற்றியை விட நாட்டின் வெற்றியே தனக்கு முக்கியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது உரையில் குறிப்பிட்டார். (ம-7)

கொள்ளவும் அதற்காக அரச காணிகளில் 300 ஏக்கர் ஒதுக்கவும் சட்டத்திருத்தம்.

மீன்பிடித்துறை மேம்பாட்டிற்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு. நன்னீர் மீன் வளர்ப்பு மேம்பாட்டிற்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

பால் பண்ணையாளர்களுக்கு விசேட கடன் திட்டங்கள் வழங்கப்படும்.

தட்டிட நிர்மாணத்துறைக்கு விசேட திட்டங்களும் அவர்களுக்கு அரச காணி களை வழங்கவும் திட்டம்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத் தத்தின் பிரகாரம், மாகாணங்களால் பல்கலைக்கழகங்களை ஸ்தாபிக்க முடி யும். எனவே, இந்த ஒழுங்குமுறை எதிர் வரும் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும். (ம-7)

## நாடு...

தடம் புரண்டிருந்த இலங்கையின் பொருளாதாரத்தை கடந்த வருடத்தில் மீண்டும் சரியான பாதையில் தூக்கி நிறுத்த முடிந்தது.

அதற்காக மக்கள் கடுமையாக உழை த்த போதும், சில தரப்பினர் நாட்டைப் பின்நோக்கி இழுக்க முயற்சித்ததாகவும் அவர் குறிப்பிட்டார். கற்பனைக் கதை களால் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது எனவும் நீண்ட காலமாக அரசி யல் கட்சிகள் வழங்கிய தேர்தல் வாக் குறுதிகளின் இறுதி முடிவு, நாட்டை வங்குரோத்து அடையச் செய்ததாகத் தெரிவித்த ஜனாதிபதி,

துரதிஷ்டவச மாக நாட்டில் உள்ள சில தரப் பினர் இதனை இன்னும் புரிந்து கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட் டினார். தொடர்ந்து இலங்கையின் 78 ஆவது வரவு - செலவுத் திட்ட உரையை நிகழ்த் திய ஜனாதிபதி, அபிவிருத்தித் திட் டங்களுக்கு அனு மதி பெறுவதற்கு புதிய பொறிமுறை ஒன்றை அறிமுகம் செய்வயும்,

புதிய திட்டங் கள் தொடர்பில் மீளாய்வு செய்ய வும் அரச குழு ஒன்று நிறுவப்ப டும் என தெரிவித் தார். அந்தக் கட்ட மைப்புக்கு வெளியே எந்தத் திட்டத்திற் கும் நிதி ஒதுக்கீடு

## பட்ஜெட்டில்...

மக்களுக்காகவும், அவர்கள் பரந்து வாழும் பிரதேசங்களுக்காகவும் ஜனாதிபதி வெளியிட்ட அறிவிப்புகள் -

யாழ்ப்பாணத்தில் நிலவும் நன்னீர்ப் பிரச்சினைக்கு தீர்வு. அதன் அடிப்படைப் பணிகளுக்காக 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

யாழ்ப்பாணத்தை உள்ளடக்கி புதிய முதலீட்டு வலயம் நிறுவப்படவுள்ளது. அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், திரு கோணமலை, பிங்கிரிய, கண்டி ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு புதிய முதலீட்டு வலயங்களை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

வடக்கு கடற்றொழிலாளர்களின் வரு மானத்தை அதிகரிக்க தனியார் துறை யுடன் இணைந்ததாக திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும். மாகாண கடற்றொ ழில் சபைகள் ஸ்தாபிக்கப்படவுள்ளன. அரச மற்றும் தனியார் துறை சார்ந்த ஒன்றிணைந்த வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும் பங்களுக்கு நட்டஈடு வழங்க 1500 மில் லியன் ஒதுக்கீடு.

விவசாய, மீன்பிடித்துறைகளை மேம் படுத்த விசேட திட்டங்கள் முன்னெடுக் கப்படும். இதற்காக 2500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

பயிரிடப்படாத உலர் வலய காணி களில் வேறு பயிர்ச்செய்கை மேற்

## அரச ஊழியர்...

கொடுப்பனவு வழங்கப்படும் என அறி வித்துள்ளார்.

எனினும் இந்த கொடுப்பனவு 2024 ஏப்ரல் மாத சம்பளத்துடனேயே வழங்கப் படும். இதற்கமைய அந்த கொடுப்பனவு 17,800 ஆக உயர்த்தப்படும். மேலும்,

ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 2500 ஆக அதிக ரிக்கப்படும், அரச ஊழியர்களுக்கு விசேட கடன் வழங்கப்படும், மூத்த குடிமக்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை கொடுப் பனவு 3,000/- ரூபாயாக அதிகரிக்கப்படும்.

கர்ப்பிணிகளுக்கான மாதாந்த கொடு ப்பனவு அதிகரிக்கப்படும், தோட்ட தொழி லாளர்களுக்கு காணி உரிமை வழங் கப்படும்.

முந்தைய ஆண்டுகளில், சமூகப் பாது காப்புத் திட்டத்திற்காக செலவழிக்கப்பட்ட பணத்தின் 3 மடங்கு 2024 ஆம் ஆண் டின் நிவாரணத்திற்காக செலவிடப்படும்.

ஊனமுற்ற நபர்கள், CKDU நோயா ளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான நன்மை திட்டங்களுக்கு 205 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

2024 பட்ஜெட்டில் இருந்து SME களின் வளர்ச்சிக்காக 50 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு. சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் 30 பில்லியன் ரூபாய் கடன் வசதி.

அரச துறையின் மாதாந்த சம்பளத் திற்காக 93 பில்லியன் ரூபா, காப்புறுதி, மருந்துகள், ஓய்வூதியம் உட்பட பொதுநல செலவுகளுக்கு 30 பில்லியன் ரூபா, கடன் வட்டி செலுத்த 220 பில்லியன் ரூபா என 3 பிரதான செலவுகளுக்காக மாத்திரம் அரசாங்கம் ஒவ்வொரு மாதமும், 383 பில்லியன் ரூபாவை செலவிடுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டினார்.

குறைந்த வருமானம் உள்ள குடும் பங்களுக்கு வழங்கப்படும் நகர்ப்புற வீட்டு வளாகங்களில் இருந்து வாடகை பெறுவது நிறுத்தப் படும்.

அந்த வீடுகளின் உரிமை குடியிருப் போருக்கே வழங் கப்படும்.

கிராம நிலங் கள் விவசாயிக ளின் தனிப்பட்ட உரிமைக்கு வழ ங்கப்படும். இதன் ஊடாக 20 குடும் பங்களுக்கு சொத்து கிடைக்கும் என வும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17832)
076 825 7716 (ஆகாஸ்)

Pearson International College
Applications are called for English teachers & IELTS tutors
- Candidates should have minimum HND in English or any other academic qualification in english medium
- previous IELTS score above or equal to 6.5 is recommonded (not necessary)
- Prior teaching experience would be an added advantage
- Weekends and weekdays shifts are available.
(C-7627)
Email your CV within three days of thisadvertisement to Pearsoncollege 2020@gmail.com, admin@picsl.lk
Call +94 74 188 7878 for more info
No.21,3rd Lane, Power house Road, Jaffna.

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7628)
0777-068-777
49A சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

வீடு விற்பனைக்கு
யாழ் ஸ்ரான்லி வீதியில் மூன்று பரப்பும் ஆறு குழியும் கொண்ட ஐந்து படுக்கையறைகள் கொண்ட நடுத்தர வீடு விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம். வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: (17860)
077 615 3645

IELTS - New Batch ஆரம்பம்
இத்துடன் Basic & Advance Grammar Classes.
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17871)

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு முடிவெட்டுவதற்கு ஆண் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (17863)
076 759 3357
078 512 6821

VILLAGE HOTEL
பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17484)
T.P: 077 544 8503

கல்யாணமாலை
(இலவச திருமண சேவை)
பதவி வெற்றிடம்
முகாமைத்துவ உதவியாளர் (பெண்கள்)
- வயதெல்லை – 40 இற்கு மேல்.
- அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- யாழ். நகரத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை
தொடர்புகளுக்கு
076 097 3121

காணி விற்பனைக்கு
மந்துவில் ஸ்ரீபார்வதி வித்தியாலயத்திற்கு அருகில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (17857)
077 958 0815

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்.
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... அவர்களது அச்சகத்தில் 14.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org